REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 மார்ச் 11 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
89 1932 - 2021
வரு. 90 இல. 60 | Friday 11, March, 2022 | 20பக்கங்கள் | 30/-




## கொவிட் 19 தொற்றாளர் எண்ணிக்கையில் வீழ்ச்சி

### முறையான தடுப்பூசியே காரணம்



கொவிட்19 தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்படுவதாக அறிக்கைகள் தெரிவிப்பதாக தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் சமித கினிகே நேற்று (10) தெரிவித்தார்.

இவ்வாறு வீழ்ச்சியடைவதற்கு காரணம் தடுப்பூசி என்பதோடு சரியான முறையில் தடுப்பூசி டோஸ்களை பெறுவதன் மூலம் தொடர்ந்து இந்த வீழ்ச்சியை பேண முடியுமென அவர் தெரிவித்தார்.

கடந்த ஒகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் இரண்டாவது கொவிட்19 தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களின் நோய் எதிர்ப்பு சக்தி தற்போது குறைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

குறைந்துள்ள கொவிட்19 தடுப்பு எதிர்ப்பு சக்தியை

06

## தனியார் ஊழியர்களுக்கும் சலுகை இழப்பீட்டுச் சட்டத்தில் திருத்தம்

**ஷம்ஸ் பாஹிம்**



அரசாங்க ஊழியர்களைப் போன்றே தனியார்த் துறை ஊழியர்களுக்கும் சலுகைகளை வழங்கும் வகையில் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

இதன்படி, அரச உத்தியோகத்தர் ஒருவர் பணிக்கு வரும் போது மற்றும் பணி முடிந்து வீடு திரும்பும் போது ஏற்படும் விபத்துக்களுக்காக வழங்கப்படும் இழப்பீடு, தனியார் துறை ஊழியர்களுக்கு வழங்கும் வகையில் ஊழியர் கட்டளைச் சட்டத்தின் சரத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அதேபோல், பணியில் ஈடுபட்டிருக்கும் போது ஏற்படும் விபத்துக்களுக்காக வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை 5 இலட்சம் ரூபாவிலிருந்து 20 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தொழில்

06

### இலங்கை – இந்திய பக்தர்களின் பங்கேற்பில்

## கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா நாளை நடைபெறும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நாளை இலங்கை இந்திய பக்தர்களின் பங்கேற்புடன் பக்தி பூர்வமாக கொண்டாடப்படவுள்ளது.

இரு நாடுகளிலும் நிலவும் கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக இம்முறை மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் இலங்கையிலிருந்து 100 பேருக்கு உட்பட்ட பக்தர்களும் இந்தியாவிலிருந்து 100 பக்தர்களும் திருவிழாவில் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

திருவிழா நிகழ்வுகள்

06

### மின்சாரம், எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு

# திங்கள் முதல் எரிபொருள் விநியோகம் வழமைக்கு

### இம்மாதம் 1,72,000 மெ.தொன் டீசல் தயார் நிலையில்





நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் விநியோகம் தொடர்பான பிரச்சினைகள் நாளை சனிக்கிழமை தீர்க்கப்படுவதுடன் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் எரிபொருள் விநியோகம் வழமை நிலைமைக்குத் திரும்புமென எரிசக்தி அமைச்சின் செயலாளர் திருமதி கே.டி.ஆர். ஒல்கா தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மத்திய நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சின் செயலாளர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்கவும் கலந்து கொண்டார். ஜனாதிபதி ஊடக பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க தலைமையில் நடைபெற்ற இந்த ஊடக மாநாட்டில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

06






களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் மற்றும் படகுகள், கப்பற் தொழில் அபிவிருத்தி புதிய இராஜாங்க அமைச்சராக லொஹான் ரத்வத்தே நேற்று (10) ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்தும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டார்.



## ஐரோப்பிய நாடுகள் மலையக மக்கள் தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டும்

### பிரான்ஸ் தூதுவரிடம் மனோ எம்பி கோரிக்கை

## இலங்கையில் 317 மத்ரஸாக்களே முஸ்லிம் திணைக்களத்தில் பதிவு

### பதிவேட்டிலுள்ள சரியான தரவுகள் இதுவே என்கிறார் பணிப்பாளர்



இலங்கையில் 317 பதிவு செய்யப்பட்ட மத்ரஸாக்கள் (அரபுக் கல்லூரிகள்) இருப்பதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேபோன்று 132 மத்ரஸாக்கள் (அரபுக் கல்லூரிகள்) பதிவு செய்யப்படாமல் இருப்பதாகவும் பதிவு செய்யப்பட்டு இயங்கு நிலையில் இல்லாத 32 மத்ரஸாக்கள் இருப்பதாகவும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்ராஹிம் அன்சார் தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட தரவுகளே தங்களது

06

## பேறறிவாளன் விரைவிலேயே நிரந்தரமாக விடுதலையாவார்

### தாயார் அற்புதம்மாள் நம்பிக்கை



**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**

பேரறிவாளன் விரைவிலேயே நிரந்தரமாக விடுதலை செய்யப்படுவாரென்ற நம்பிக்கை தனக்கு ஏற்பட்டுள்ளதாக அவரது தாயார் அற்புதம்மாள் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையிலிருக்கும் பேரறிவாளன் உள்பட 07 தமிழர்களையும் விடுதலை செய்யக்கோரி ஆளுநருக்கு அனுப்பப்பட்ட தீர்மானத்தின் மீது ஆளுநர் இன்னும் முடிவெடுக்கவில்லை. ஆனால் பரோலில் வெளியே வந்த பேரறிவாளன் தனக்கு பிணை வழங்க கோரி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் அவருக்கு பிணை வழங்கி உத்தரவிட்டது.

06

### உள்ளக விவகாரங்களில் தலையிடும் அதிகாரம்

## ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு கிடையாது

**பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்**



இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடும் அதிகாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு கிடையாது. ஐ.நா மனித உரிமை பேரவை தனது விடயதானத்துக்கு அப்பாற்பட்டு இலங்கை மீது அழுத்தம் கொடுக்கிறது என தெரிவித்த வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், உள்ளக பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொறுப்பை ஒருபோதும் சர்வதேசத்திடம் ஒப்படைக்கமாட்டோமெனவும்

06

## இலங்கையின் மிகவும் வயதான பெண் காலமானார்

இலங்கையின் மிகவும் வயது முதிர்ந்த பெண்ணாக கருதப்படும் கன்கானமி கமகே டிங்கிஹாமி, நேற்றுக் காலை (10) தனது 116 வயதில் காலமானார்.


1906 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் திகதி வெலிபிட்டிய பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அக்குரஸ்ஸ, அத்துரலிய பிரதேசத்தில் பிறந்த அவர் இமதுவ – கனங்கே கனங்கே வத்தையை வசிப்பிடமாகக் கொண்டிருந்தார்.

06

## திரவப் பால் கோரி எம்பிக்கள் தகராறு செய்தார்களா?

### பத்திரிகை செய்தி தொடர்பில் விசாரணைக்கு சபாநாயகர் பணிப்பு


**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



திரவப்பால் தருமாறு கேட்டு எம்.பிக்கள் சிலர் பாராளுமன்ற உணவகத்தில் தகராறில் ஈடுபட்டதாக செய்தி வெயிடப்பட்டிருக்கின்றது. ஊடக சுதந்திரத்தை தவறாகப் பயன்டுத்தி எம்.பிக்களின் கௌரவத்துக்கு குந்தகம் ஏற்படும் வகையில் செய்தி வெளியிடப்படுவது கவலையளிக்கிறது என தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இது தொடர்பாக எடுக்கக் கூடிய நடவடிக்கை தொடர்பில் சபைக்கு அறிவிக்க இருப்பதாக நேற்று

06

## இலங்கை மத்திய வங்கி நாணய மாற்று விகிதம்



இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள் முதல் பெறுமதி 249 ரூபா 96 சதம் விற்பனை பெறுமதி 259 ரூபா 99 சதமாகவும்

06



## ரணிலுடன் இணைந்து தேசிய அரசு அமைக்கும் தேவை கிடையாது - திலும்

### அரசுக்கு 2/3 பெரும்பான்மைக்கு பாதிப்பில்லை

## நிதி அமைச்சர் தொடர்பான எதிரணி குற்றச்சாட்டுக்கு ஆளும் தரப்பு மறுப்பு



- நிதி அமைச்சர் சபைக்கு வருவதில்லை – கிரியெல்ல
- பொய்க் குற்றச்சாட்டுக்களை வாபஸ் பெறுக – தினேஷ்

**அமைச்சர் ஒருவரை கட்டாயப்படுத்தி சபைக்கு அழைத்து வர முடியாது என்கிறார் சபாநாயகர்**

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாராளுமன்றம் வராதது தொடர்பில் எதிரணி எம்.பிக்கள் நேற்று சபையில் கேள்வி எழுப்பியதால் சபையில் கடுமையான சர்ச்சை ஏற்பட்டது.

03 மாத காலமாக நிதியமைச்சர் பாராளுமன்றம் வரவில்லையெனவும் நாட்டின் பொருளாதார நிலை தொடர்பில் அறிவிப் பொன்று வெளியிடுமாறு அவருக்கு பணிக்குமாறும் எதிரணி கோரியது.

ஆனால் எதிரணியின் குற்றச்சாட்டை மறுத்த ஆளும் தரப்பு, அவர் அவ்வப்போது பாராளுமன்றம் வந்து செல்வதாகவும் அவர் சார்பில் சகல

06

### ஸ்ரீல.சு.க உட்பட எந்தக் கட்சியுடனும்

## இணைந்து கூட்டணி உருவாக்க ஜே.வி.பி. தயாரில்லை



எந்தக் கட்சியுடனும் இணைந்து புதிய கூட்டணியை உருவாக்கப்போவதில்லையென மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் லால்காந்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குற்றங்களில், ஊழல்களில் ஈடுபடாத தனிநபர்களுடன் இணைந்து செயற்படத் தயாரென்றும் அவர் தெரிவித்துள்ளார். மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கூட்டணியை உருவாக்கவுள்ளதாக வெளியான தகவல்களையும் அவர் நிராகரித்தார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால

06

## பிறந்து 07 நாட்களான பெண் சிசுவை சுட்டுக்கொன்ற தந்தை



பிறந்து 07 நாட்களேயான பெண் சிசுவை தந்தை சுட்டுக் கொன்றசம்பவம் பாகிஸ்தானில் இடம்பெற்றுள்ளது.

பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணத்தில் மியான் வாலி மாவட்டத்தில் வசித்து வரும் ஷாஜீப் என்பவருக்கு முதலில் பெண் குழந்தை பிறந்தது.

இதனையடுத்து,

06

# சர்வதேச செய்திகள்

## ரஷ்ய இரசாயனத் தாக்குதல் பற்றி அமெரிக்கா எச்சரிக்கை



உக்ரைனில் இரசாயன அல்லது உயிரியல் ஆயுத தாக்குதலுக்கு ரஷ்யா திட்டமிட்டுக் கொண்டிருக்கலாம் என்றும் “நாம் அனைவரும் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்” என்றும் அமெரிக்க ஜனாதிபதி அலுவலகமான வெள்ளை மாளிகை கூறியுள்ளது.

வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலாளர் ஜென் சாகி, அமெரிக்க உயிரியல் ஆயுத ஆய்வகங்கள் மற்றும் உக்ரைனில் இரசாயன ஆயுத மேம்பாடு பற்றிய ரஷ்யாவின் கூற்றுகள் அபத்தமானவை என்று கூறியுள்ளார்.

இந்த பொய்யான கூற்றுகள், மேற்கொண்டு அவர்கள் நடத்தவிருக்கும் காரணமற்ற தாக்குதல்களை நியாயப்படுத்த கூறும் “வெளிப்படையான தந்திரம்” என்றும் அவர் கூறினார்.

மேற்கத்திய நாடுகளின் அதிகாரிகள் புதிய தாக்குதல்கள் பற்றி இதேபோன்ற கவலைகளைப் பகிர்ந்து கொண்ட நிலையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்நிலையில், ரஷ்யா அதிநவீன ஆயுதங்களை உக்ரைன் மீது பயன்படுத்தக்கூடுமென மேற்கத்திய அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

இதனால் மிகப்பெரிய சேதம் ஏற்படக்கூடுமென அவர்கள் கவலை தெரிவித்தனர்.

சிறிய அளவிலான அணுவாயுதங்கள், உயிரியல் ஆயுதங்கள், கதிரியக்கப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படும் வெடிகுண்டுகள் முதலியவற்றை ரஷ்யா பயன்படுத்தலாம் எனும் அச்சமும் எழுந்துள்ளது.

## ஐ.அ.இ வாக்குறுதியால் எண்ணெய் விலை சரிவு



எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஐக்கிய அரபு இராச்சியம் ஆதரவு அளித்ததை அடுத்து எண்ணெய் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பலம் மிக்க எண்ணெய் கூட்டணியான ஒபெக்கின் உறுப்பு நாடாக உள்ள ஐக்கிய அரபு இராச்சியம் வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்து சர்வதேச குறியீடான ப்ரென்ட் மசகு எண்ணெய் 17 வீதம் சரிவை சந்தித்தது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பினால் விநியோகத்தில் இடையூறு ஏற்படும் அச்சம் காரணமாக கடந்த சில வாரங்களில் எண்ணெய் விலை உச்சத்தைத் தொட்ட நிலையிலேயே இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த விலை அதிகரிப்பு சர்வதேச அளவில் நிதி நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது.

வீட்டு உரிமையாளர்கள் மீதான விலை அதிகரிப்பை குறைப்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் ஏனைய தலைவர்கள் உறுதி அளித்துள்ளனர். இந்நிலையில் எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க எண்ணெய் உற்பத்தி நாடுகளுடன் அமெரிக்க அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் வொசிங்டன் தூதரகம் வெளிட்ட ட்விட்டர் அறிவிப்பில், “உற்பத்தியை அதிகரிப்பதற்கு நாம் ஆதரவு அளிப்பதோடு அதிக உற்பத்தி அளவு பற்றி அவதானம் செலுத்த ஒபெக் நிறுவத்திற்கு நாம் ஊக்கமளிக்கிறோம்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி தொடக்கம் எண்ணெய் விலை 30 வீதத்திற்கு மேல் அதிகரித்து ஒரு சந்தர்ப்பத்தில் பீப்பாய் ஒன்று 139 டொலர்களை எட்டி இருந்தது. எனினும் நேற்றைய வர்த்தகத்தில் ஆசிய சந்தையில் பீப்பாய் ஒன்று 115 டொலர்களாக குறைந்து இருந்தது. விலை மோதல் ஒன்றை தவர்ப்பது மற்றும் சந்தையில் விலையை கட்டுப்படுத்துவது குறித்து சவூதி அரேபியா தலைமையிலான எண்ணெய் உற்பத்தி நாடுகள் மற்றும் ஒபெக் பிளஸ் என அழைக்கப்படும் ரஷ்யா உட்பட்ட நாடுகளுக்கு இடையே இணக்கம் எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆப்கானில் அபின் உற்பத்தி அதிகரிப்பு



ஆப்கானிஸ்தான் நாட்டின் ஹெல்மண்ட், காந்தஹார் ஆகிய மாகாணங்களில் கடந்த ஆண்டை விடவும் இவ்வருடம் அபின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் செடியின் அறுவடை அதிகரித்துள்ளதாக மாகாண மட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானின் தென் மாகாணங்களில் அபின் மற்றும் இதர போதைப்பொருட்கள் திறந்த சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. காந்தஹார், ஹெல்மண்ட் ஆகிய இரண்டு மாகாணங்களும் அபின் செடியைப் பயிரிடுவதில் முன்னணி மாகாணங்களாக விளங்குவதாக ‘டோலோ நியூஸ்’ தெரிவித்துள்ளது.

உலகில் போதைப்பொருள் உற்பத்தியில் முன்னணி நாடுகளில் ஒன்றாக ஆப்கானிஸ்தான் விளங்குகிறது.

## ரஷ்யாவின் உக்ரைன் படையெடுப்பு மூன்றாவது வாரத்தைத் தொட்டது

### மருத்துவமனை தாக்குதலை மறுத்தது ரஷ்யா



உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து நேற்று மூன்றாவது வாரத்தை தொட்ட நிலையில் அதன் இலக்கு இன்னும் எட்டுப்படாத சூழலில் இந்தப் போரினால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டு இரண்டு மில்லியனுக்கும் அதிகமானோர் அகதிகளாக்கப்பட்டிருப்பதோடு ஆயிரக்கணக்கான மக்கள் முற்றுகையில் உள்ள நகரங்களில் சிக்கித் தவிக்கின்றனர். உக்ரைன் மீது தொடர்ந்து குண்டு வீசப்பட்டு வருகிறது.

மரியுபோல் நகரில் இருக்கும் சிறுவர் மருத்துவமனை ஒன்றின் மீது தாக்குதல் நடத்திய ரஷ்யா ‘இனப்படுகொலையில்’ ஈடுபட்டிருப்பதாக உக்ரைன் குற்றம்சாட்டுகிறது. எனினும் இந்த செய்தி போலியானது என்று மறுத்துள்ள ரஷ்யா, அந்தக் கட்டடம் முன்னாள் மகப்பேறு மருத்துவமனை என்றும் அதனை உக்ரைன் படை நீண்டகாலமாக பயன்படுத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

உக்ரைனிய இராணுவத்தை நசுக்குவது மற்றும் அந்நாட்டு ஜனாதிபதி வொலொடிமிர் செலென்ஸ்கியின் மேற்குல ஆதரவு அரசாங்கத்தை வெளியேற்றுவதை இலக்காகக் கொண்டே ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்தது. எனினும் போலந்து மற்றும் ருமெனிய எல்லைகள் வழியாக வரும் மேற்குலக நாடுகளின் இராணுவ உதவியுடன் உக்ரைன் அரசு ரஷ்யாவின் தாக்குதலுக்கு தொடர்ந்து தாக்குப் பிடித்து வருகிறது.

தலைநகர் கியேவின் வடமேற்கில் உள்ள மிகப்பெரிய ரஷ்யப் படை ஒரு வாரத்திற்கு மேல் நிலைகொண்டிருக்கும் சூழலில் அது சற்று முன்னேற்றம் கண்டிருப்பதாக பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு நேற்று தெரிவித்தது. இந்தப் படை பெரும் உயிர்ச் சேதத்தை சந்தித்து வருவதாகவும் அந்த இழப்புகளுக்கு மாற்றாக முழு படையையும் பயன்படுத்தும் நெருக்கடிக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தள்ளப்பட்டிருப்பதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

எனினும் தமது படைகள் திட்டமிட்டபடி உக்ரைனில் முன்னேற்றம் கண்டு வருவதாக புட்டின் குறிப்பிட்டுள்ளார். இந்த படையெடுப்பை “சிறப்புப் படை நடவடிக்கை” என்று அறிவித்திருக்கும் ரஷ்யா, அண்டை நாட்டில் ஆயுதக்களைவு மற்றும் ‘நியோ நாஜி’ என்று அழைக்கும் தலைவர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளது.

ரஷ்யப் பொருளாதாரத்தை துண்டிக்கும் வகையில் மேற்குலக நாடுகள் தொடர்ந்து தடைகளை விதித்து வருவதோடு இதனால் ரஷ்ய பங்குச்சந்தை மற்றும் அந்நாட்டு நாணயமான ருபிள் வீழ்ச்சி கண்டு வருகிறது.

**“மருத்துவமனை குண்டுவீச்சு”**

ரஷ்ய விமானங்கள் கடந்த புதன் கிழமை சிறுவர் மருத்துவமனை ஒன்றின் மீது குண்டு வீசியதாக ரஷ்ய அதிகாரிகள் கூறிய நிலையில், ரஷ்யா இனப்படுகொலையில் ஈடுபட்டிருப்பதாக செலென்ஸ்கி குற்றம்சாட்டியுள்ளார். மரியுபோலில் போர் நிறுத்தம் ஒன்று எட்டப்பட்ட நிலையில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலால் நோயாளிகள் இடிபாடுகளின் கீழ் சிக்கி இருப்பதாக கூறப்பட்டது.

“மருத்துவமனைகள், மகப்பேறுகள் மீது பயப்பட்டு அவைகளை அழிக்கும் ரஷ்ய கூட்டமைப்பு என்பது எந்த வகையான ஒரு நாடு என்று புரியவில்லை” என்று செலென்ஸ்கி கடந்த புதன்கிழமை தொலைக்காட்சியில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

இந்த தாக்குதலால் பிரசவ வார்டில் இருந்த பெண்கள் காயமடைந்திருப்பதாகவும் சிறுவர்கள் இடிபாடுகளில் சிக்கி இரப்பதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். ரஷ்யா ஆரம்பத்தில் சந்தித்துள்ள பின்னடைவுகளால் அந்த நாடு தாக்குதல்களை தீவிரப்படுத்தக்கூடும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

மருத்துவமனை மீதான தாக்குதலுக்கு கண்டனம் வெளியிட்டிருக்கும் அமெரிக்கா, “அப்பாவி பொதுமக்கள் இலக்குகள் மீது இராணுவத்தை பயன்டுத்துவது காட்டுமிராண்டித்தனமானது” என்று குறிப்பிட்டது.

தாக்குதல் குறித்து வெளியிடப்பட்ட வீடியோக்களில் மருத்துவமனைக் கட்டடம் சேதமடைந்திருப்பதும், அதன் வெளிப்புறம் பெரிய குழி ஏற்பட்டிருப்பதும் தென்படுகிறது.

இந்தத் தாக்குதலில் குறைந்தது 17 பேர் காயமடைந்ததாக கூறப்பட்டுள்ளது.

எனினும் “இப்படித் தான் போலிச் செய்திகள் பிறக்கின்றன” என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான ரஷ்யாவின் முதல் பிரதி வதிவிடப் பிரதிநிதி ட்மிட்ரி பொலியன்ஸ்கிவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா முன்னதாக முற்றுகையில் உள்ள மரியுபோலில் இருந்து மக்கள் வெளியேற உதவியாக போர் நிறுத்தம் ஒன்றை அறிவித்தது. இந்த நகரில் நீர் மற்றும் மின்சாரம் இன்றி மக்கள் ஒரு வாரத்துக்கும் மேலாக சிக்கியுள்ளனர். இந்த வெளியேற்ற நடவடிக்கை தோல்வி அடைந்ததற்கு இரு தரப்பும் பரஸ்பரம் குற்றம் சாட்டுகின்றன.

## தென்கொரிய ஜனாதிபதி தேர்தலில் யூன் வெற்றி



கடும் போட்டி நிலவிய தென் கொரிய ஜனாதிபதி தேர்தலில் பழமைவாத எதிர்க்கட்சி வேட்பாளர் யூன் சுக் யெவோல் வெற்றிபெற்றுள்ளார்.

அரசியலுக்கு புதியவரான யூன், ஏற்றத்தாழ்வை ஒழிப்பதாக வாக்குறுதி அளித்த நிலையில் ஜனநாயகக் கட்சியின் லீ ஜே மியுங்கை தோற்கடித்துள்ளார். “இது தென் கொரிய மக்களின் மாபெரும் வெற்றி” என்று அவர் தனது வெற்றியை குறிப்பிட்டுள்ளார்.

எனினும் கடந்த புதன்கிழமை நடைபெற்ற தேர்தலின் முடிவு தென் கொரிய வரலாற்றி மிகவும் நெருக்கமான தேர்தலாக இருந்தது. இதில் இறுதி முடிவில் 1 வீதத்திற்கும் குறைவான வாக்கு வித்தியாசத்திலேயே யூன் வெற்றியீட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பன்றியின் இதயத்தை பெற்றவர் மரணித்தார்



மரபணு மாற்றப்பட்ட பன்றியின் இதயத்தைக் கொண்டு உலகில் முதல் உறுப்பு மாற்று சத்திரசிகிச்சை செய்து கொண்டவர் உயிரிழந்துள்ளார்.

இதய நோயினால் பாதிக்கப்பட்ட டேவிட் பென்னட் என்ற அமெரிக்க ஆடவர் இரண்டு மாதங்களே உயிர்வாழ்வார் என்று கூறப்பட்ட நிலையிலேயே அவருக்கு இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. எனினும் கடந்த சில நாட்களாக அவரது உடல் நிலை மோசமடைந்த நிலையில் கடந்த மார்ச் 8 ஆம் திகதி தனது 57 ஆவது வயதில் மரணித்ததாக அவரது மருத்துவர்கள் குறிப்பிட்டனர். கடந்த ஜனவரி 7 ஆம் திகதியே அவர் உறுப்புமாற்று சந்திரசிகிச்சை செய்துகொண்டார்.

## உக்ரைனுக்கு 1.4 பில். டொலர் அவசர நிதி



சர்வதேச நாணய நிதியம் உக்ரைனுக்கு 1.4 பில்லியன் டொலர் அவசர நிதிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

உக்ரைன் அதன் உடனடிச் செலவுகளைக் கவனித்துக்கொள்ளவும், ரஷ்யாவின் படையெடுப்பால் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பைக் குறைக்கவும் அந்த நிதி உதவும். உக்ரைன் இந்த ஆண்டில் பெரும் பொருளாதார மந்த நிலையை எதிர்கொள்ளும் என்று சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் போர் ஆரம்பித்தது தொடக்கம் 2 மில்லியனுக்கும் அதிகமான உக்ரைனியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இந்த வார அரம்பத்தில் உலக வங்கி உக்ரைனுக்கு 732 மில்லியன் டொலர் நிதிக்கு ஒப்புதல் அளித்ததோடு எதிர்வரும் மாதங்களில் மேலும் பொருளாதார உதவிகள் பற்றி அது உறுதி அளித்தது.

## ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ரஷ்யா மீது மேலும் தடை



ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்யா மீது கூடுதல் தடைகளை அறிவித்துள்ளது.

ரஷ்ய அரசாங்க அதிகாரிகள் 160 பேருக்குப் பயணத் தடைகளை அறிவித்ததோடு, அவர்களின் சொத்துகளை முடக்குவதாகவும் அது தெரிவித்தது. ரஷ்யச் செல்வந்தர்கள் மேலும் 16 பேர் மீதும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மீதும் ஐரோப்பிய ஒன்றியம் தடைகளை அறிவித்தது. ரஷ்யாவுக்கான கடல்துறை வழிகாட்டி, தொடர்புத் தொழில்நுட்பச் சாதனங்கள் போன்றவற்றின் ஏற்றுமதிகளுக்கும் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ரஷ்யாவின் முக்கிய நட்பு நாடான பெலாரஸைச் சேர்ந்த 3 வங்கிகள் ஸ்விப்ட் எனும் சர்வதேச கட்டண முறையைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பு: பலர் வெளியேற்றம்



இந்தோனேசியாவின் மெரபி எரிமலை வெடித்து எரிமலைக் குழம்பை கக்க ஆரம்பித்ததை அடுத்து 250க்கும் அதிகமானோர் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

உலகில் இயக்கம் கொண்ட எரிமலைகளில் ஒன்றாக இருக்கும் மெரபி எரிமலை கடந்த புதன் கிழமை இரவு பல தடவைகள் வெடித்ததோடு சாம்பல் புகையை கக்கியது. இந்த எரிமலையில் இருந்து வீசப்பட்ட பாறைகள் ஐந்து கிலோமீற்றர் தூரம் வரை சென்று விழுந்திருப்பதாக இந்தோனேசிய தேசிய அனர்த்த முகாமை மற்றும் தனிப்பு நிறுவன தலைவர் தெரிவித்துள்ளார்.

எரிமலையைச் சூழ ஏழு கிலோமீற்றர் சுற்றளவில் இருப்பவர்கள் அங்கிருந்து வெளியேறும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கடைசியாக 2010 ஆம் ஆண்டு இந்த எரிமலையில் நிகழ்ந்த பாரிய வெடிப்பில் 300க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 மார்ச் 11 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN


தொழுகை நேரம்

சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்

பிலவ வருடம் மாசி 27

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# அரசின் உத்தேச நகர அபிவிருத்தி திட்டம் ஜனாதிபதியிடம் கையளிப்பு



பல முக்கிய நகரங்களில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் நகர அபிவிருத்தித் திட்டங்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடம் நேற்று (10) ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் வேலைத் திட்டத்துக்கமைய நாட்டின் அபிவிருத்தி இலக்குகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் முக்கிய நகர அபிவிருத்திப் பணிகளை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, துறைசார் நிறுவனங்களுடன் இணைந்து திட்டமிட்டுள்ளது.

இதன் முதற்கட்டத்தின் கீழ், காலி, பண்டாரவளை, இரத்தினபுரி நகர மத்தி மற்றும் திம்பிரிகஸ்யாய, கோட்டை, புறக்கோட்டை மற்றும் கொள்ளுப்பிட்டி ஆகிய விசேட பொருளாதார வலயங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. பசுமை நகர எண்ணக்கருவுக்கு முன்னுரிமை அளித்து, அனைத்து வசதிகளுடன் கவர்ச்சிகரமானதாக இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

விசாலமான சாலைகள், வாகனத் தரிப்பிட வசதிகள், நடைபாதைகள், வர்த்தக வளாகங்கள் மற்றும் சூரிய சக்தியில் இயங்கும் விளக்கு அமைப்புகள் போன்ற பல வசதிகள் இப்புதிய திட்டத்தில் அடங்குகின்றன.

திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது, குறித்த நகரங்களைச் சூழவுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைப் பாதுகாப்பதுடன், பொதுமக்களைக் கவரும் வகையில் பழைய கட்டிடங்களைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா மற்றும் துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள், அதிகாரிகள் பலரும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

## தவக்கால சிந்தனை



### மனமாற்றத்தின் காலம்

தவக்காலத்தில் அதிகம் பயன்படுத்தப்படுகிற வார்த்தை மனமாற்றமாகும். ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்சிறப்புக் காலமானது நம்மிலே ஒரு மனமாற்றத்தின் பாதையினை எதிர்பார்த்து நிற்கிறது.

நாம் யாரையாவது மனம்நோகச் செய்திருந்தால் நாம் அவர்களிடத்தில் மன்னிப்பினை கேட்க முடியும். எவ்வாறு மன்னிப்பளிப்பது என்பதும் நமக்குத் தெரியும்.

இருவகையான மக்கட் கூட்டத்தினர் உளர். தீமையிலிருந்து நன்மையினை நோக்கி மனம்மாறுவோர் ஒருவகையினர். நன்மையிலிருந்து தீமையினை நோக்கி நகர்வோர் மறுவகையினர். முதல் வகையினர் தங்கள் மாற்றத்தினூடாக கடவுளில் மகிழ்வர்.

அவர்களிடத்தில் வாழ்வுண்டு. மறுவகையினர் தங்கள் பாவத்தினால் அழிவுறுவோர். கடவுள் பாவிகள் அழிந்து போகவேண்டுமென்பதில் நாட்டம் கொள்பவரல்ல மாறாக அவர்கள் வாழவேண்டுமென விரும்புகிறவர்.

இயேசுகிறிஸ்து இன்றைய நற்செய்தியினூடாக நினைவூட்டுவது யாதெனில் "மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியை விட உங்கள் நெறி சிறந்திராவிட்டால் நீங்கள் விண்ணரசுக்குள் புக முடியாது" என்பதாகும்.

மறைநூல் அறிஞரும் பரிசேயரும் பகட்டான வாழ்வினையும் வெளிவேட வழிபாட்டினையும் கொண்டிருந்தனர். ஆயினும் அவர்களது உள்ளங்களே தங்களது சகோதர சகோதரிகள் மட்டில் பளுவான சுமைகளை சுமத்துவதாய் அமைந்திருந்தது.

நமது அயலவர்கள் மட்டிலான அன்பு, பணி, இறைவேண்டல் என்பன நாம் நீதியினை செயற்படுத்தவும் கடவுளின் இரக்கத்தினை மிகுந்த வலிமையுடன் வாழவும் உதவுகின்றன.

நமது உள்ளங்கள் மனமாற்றத்திற்கான வழியினை ஒருபோதும் விட்டு விலகாதிருக்கட்டும். இத்தவக்கால பயணமானது நமது அயலவர்கள் மட்டில் இன்னும் சிறப்பாக துன்புறுவோர் மற்றும் வாழ்வின் பாதையில் மறக்கப்பட்டோர் மட்டில் நாம் அருகிலிருக்கவும் உதவிடவும் துணை புரியட்டும்.

அருட்தந்தை நவாஜி...

## ரணிலுடன் இணைந்து தேசிய அரசு அமைக்கும் தேவை கிடையாது

### அரசுக்கு 2/3 பெரும்பான்மைக்கு பாதிப்பில்லை



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்து தேசிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பதாக சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றதாகும். அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். சமகால அரசியல் நிலவரம் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி அரசியல் சூழ்ச்சியை

06

## ஐரோப்பிய நாடுகள் மலையக மக்கள் தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டும்

### பிரான்ஸ் தூதுவரிடம் மனோ எம்.பி கோரிக்கை



"ஐரோப்பிய ஒன்றிய அரசுகள், இலங்கையில் மலையக தமிழ் மக்களை கவனத்தில் கொள்ள பிரான்ஸ் வழி காட்ட வேண்டுமென பிரான்ஸ் தூதுவர் எரிக் லெவர்டிடம் தெரிவித்த போது அவர் எனது கோரிக்கையை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டதுடன் தன்னாலானவற்றை செய்வதாக உறுதியளித்ததாகவும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தினங்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி தூதுக்குழுவை சந்திக்க விரும்புவதாகவும் பிரான்சிய தூதுவர் தெரிவித்தார். மலையக மக்களின் அரசியல் ஆவணத்தை அனைத்து சர்வதேச

06

## பெந்தோட்டையில்

## ரஷ்யப் பிரஜை கடலில் மூழ்கி பலி

பெந்தோட்டை பரடைஸ் தீவிலுள்ள சுற்றுலா விடுதியில் இரண்டு வார விடுமுறைக்காக ரஷ்யாவிலிருந்து இலங்கை வந்திருந்த ரஷ்ய பிரஜை ஒருவர் ஹோட்டலுக்கு முன்னாலுள்ள கடலில் நீராடச் சென்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பெந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் வான்கோவ் அயுர்ல் (46) என்ற ரஷ்ய பிரஜை என்பது தெரியவந்துள்ளது. பெந்தோட்டையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் மனைவியுடன் தங்கியிருந்த வெளிநாட்டவர் ஒருவரே இவ்வாறு(09) உயிரிழந்துள்ளார். பிரேதப் பரிசோதனை நேற்று (10) நடைபெற்றதுடன் சடலம் அளுத்கம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## 75 மருந்து வகைகளின் விலை அதிகரிக்கப்படும்

### தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு



கட்டுப்படுத்தப்பட்ட 75 மருந்து வகைகளின் விலை அதிகரிக்கப்படுமென தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி காரணமாக மருந்துகளின் விலையை 20 வீதமாக அதிகரிக்குமாறு மருந்து இறக்குமதியாளர்களின் கைத்தொழில் சபை (09ஆம் திகதி) மருந்து மற்றும் உற்பத்தி இராஜாங்க அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி காரணமாக

06

## பைடன் நிர்வாகத்துடன் நெருக்கமாக செயற்படுவதற்கு இலங்கை தயார்

### புதிய அமெரிக்க தூதுவர் ஜூலியிடம் அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஜூலி சங், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை (09) கொழும்பிலுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் சந்தித்தார்.

தூதுவர் சங்கை அன்புடன் வரவேற்ற அமைச்சர் பீரிஸ், இலங்கையிலான அவரது பதவிக் காலத்தின் போது தூதுவருடன் நெருக்கமாகப் பணியாற்ற ஆவலுடன் இருப்பதாகத்

06

## உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் 8ஆவது ஒன்று கூடல் மாநாடு இன்று

நுவரெலியா தினகரன் நிருபர்

உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் 8வது ஒன்று கூடல் மாநாடு இன்று (11) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் ஆரம்பமாகின்றது. இரு தினங்களுக்கு நடைபெறவுள்ள இம் மாநாட்டின் முதலாவது நாள் தொடக்க விழாவில் வரவேற்புரையை உலக தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் ஜெ.செல்வமார் நிகழ்த்துகின்றார்.

நிகழ்வில் தலைமை விருந்தினர்களாக தமிழ் நாடு சட்டமன்றத்தின் தொழில் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, இந்து சமய மற்றும் அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி,

06


## வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **வேன்** | | | |
| 251 -8XXX | NISSAN | CARAVAN CRGE24 | 1994 |
| **லொறி** | | | |
| PU -0XXX | TATA | SUPER ACE | 2012 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HH -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| JO -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QD -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QC -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QC -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QF -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QE -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QM -8XXX | BAJAJ | AUTO AR 4S | 2007 |
| YC -7XXX | PIAGGIO | APE | 2010 |
| ABA -0XXX | BAJAJ | RE | 2015 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2022 மார்ச் 11ஆம், 14ஆம், 15ஆம், மற்றும் 16ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2022 மார்ச் 16ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

www.skillsads.com

தொடர்பு:
ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350





தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 27ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 07

### குறள் தரும் சிந்தனை

பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை அதுஉலகத்து
எப்பால்நூ லோர்க்கும் துணிவு

மறதி உடையவர்களுக்கு, மங்காப் புகழ் இல்லை என்பதே அனைத்தும் கற்றுணர்ந்த அறிஞர்களின் முடிவான கருத்தாகும்.

## பாடசாலைகள் சுமுகமாக இயங்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

நாட்டில் உள்ள அரசாங்கப் பாடசாலைகள் யாவும் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி உள்ளன. சுமார் ஒரு மாதகால நீண்ட விடுமுறைக்குப் பின்னர் அரசாங்கப் பாடசாலைகள் ஆரம்பமாகி உள்ளன. கொவிட் பாதுகாப்புக்கான விதிமுறைகளை உரியவாறு பேணியபடி பாடசாலைகள் செயற்பட வேண்டும் என்று அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

கடந்த இருவருட காலத்துக்கு மேலாக நாட்டில் அடுத்தடுத்து மூன்று தடவைகள் கொவிட் தொற்று அலை தலைதூக்கி, தணிவடைந்ததையடுத்து பாடசாலைகளை தற்போது ஓரளவு சுமுகமாக நடத்தக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. கொவிட் பாதுகாப்பு தொடர்பான அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களை கடைப்பிடித்ததனாலும், நாட்டில் கூடுதலானோருக்கு தடுப்பூசி ஏற்றியதன் விளைவாகவும் மீண்டும் ஒரு அலை உருவாவதற்கான அச்சம் தணிந்துள்ளது.

இவ்வாறான நிலையிலேயே அரசாங்கப் பாடசாலைகள் இவ்வாரம் ஆரம்பமாகி உள்ளன. மாணவர்கள் நெருக்கமாகப் பழகுகின்ற இடம் பாடசாலைகள் ஆகும். எனவே கொவிட் பாதுகாப்பு நடைமுறைகளை அனைவரும் நன்கு உணர்ந்து கொண்டு அவதானமாக செயற்படும் பட்சத்தில் பாடசாலைகளை சுமுகமாக இயங்கச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

பாடசாலைகளைப் பொறுத்தவரை கொவிட் பாதுகாப்பு விதிமுறைகளை உரியவாறு கடைப்பிடிப்பதில் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெரும் பங்கு உள்ளது. ஆனால் இந்த விடயத்தில் பெற்றோருக்கும் முக்கிய பங்கு இருக்கிறது. தங்களது பிள்ளைகள் விடயத்தில் பெற்றோர் அலட்சியமாக நடந்து கொள்வார்களானால் மாணவர்கள் மத்தியில் கொவிட் தொற்று பரவுவது தவிர்க்க முடியாததாகி விடும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு அவர்களது பெற்றோர் கொவிட் தொற்று பாதுகாப்பு தொடர்பாக அடிக்கடி புத்திமதிகள் கூறத் தவறக் கூடாது. முகக்கவசத்தை அணியும் முறை, கைகளின் சுத்தம் பேணுதல், சகமாணவர்களுடன் தூர இடைவெளியைப் பேணுதல் போன்ற ஆலோசனைகளை பெற்றோர் தங்களது பிள்ளைகளுக்கு அடிக்கடி வழங்குதல் வேண்டும்.

அதுமாத்திரமன்றி பாடசாலை முடிவடைந்து பிள்ளைகள் வீடு வந்துசேர்ந்ததும் அவர்களை நீராடச் செய்து, உடைகளை மாற்றி சுத்தம் பேணுவதில் முதலில் கவனம் செலுத்துவது அவசியம். பெற்றோர் இவ்விதம் அவதானமாக நடந்து கொண்டால் மாணவர்கள் மத்தியில் கொவிட் பரவுவதை பெருமளவில் தவிர்க்க முடியும்.

உலகப் பெருந்தொற்றின் விளைவாக உலகின் அத்தனை நாடுகளையும் போன்று இலங்கையிலும் கடந்த இருவருட காலத்துக்கு மேலாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. முன்னர் நேரடிக் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த எமது மாணவர்கள் கொவிட் தொற்று காரணமான முடக்க நிலையினால் நிகழ்நிலை கல்விக்கு பழக்கப்பட்டுப் போனார்கள். ஆனாலும் நேரடிக் கற்பித்தல் கற்றல் நடவடிக்கைகளால் கிடைத்த பலனை நிகழ்நிலைக் கல்வி மூலம் மாணவர்களால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. கடந்த இருவருட காலத்தில் நடத்தப்பட்ட பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகள் இப்பாதிப்பை நன்கு வெளிப்படுத்தி இருந்தன.

நிகழ்நிலைக் கற்பித்தல் முறையானது அனைத்து மாணவர்களுக்கும் ஏற்புடையது அல்ல என்பது இதன் மூலம் தெரியவந்துள்ளது. ஆனால் கணிசமான மாணவர்கள் நிகழ்நிலைக் கல்வி மூலம் பயன் பெற்றுக் கொண்டனர்.

மெல்லக்கற்கும் மாணவர்கள் மற்றும் ஆற்றல் குறைந்தோர், ஸ்மார்ட் கைத்தொலைபேசி கிடைக்காத வறிய மாணவர்கள் போன்றோர் நிகழ்நிலைக் கல்வியினால் பெரும் பின்னடைவையே எதிர்நோக்கினர். அவர்களால் அரசாங்க பொதுப்பரீட்சைகளில் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

இவ்வாறான நிலையில் எதிர்காலத்தில் முடக்க நிலமை மீண்டும் உருவாவதற்கு வாய்ப்பில்லை என்ற நம்பிக்கையில் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகி உள்ளன. ஆகவே மாணவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு கற்பித்தல் செயற்பாடுகளை முழுமையான வினைத்திறனுடன் முன்னெடுக்க வேண்டிய பெரும் பொறுப்பில் ஆசிரியர்கள் தற்பொழுது உள்ளனர். கடந்த கால கல்விப் பாதிப்புகளை கவனத்தில் கொண்டு ஆசிரியர்கள் செயற்படுவார்களானால் மாணவர்களின் கல்வியை மீளக்கட்டி எழுப்புவது கடினமான காரியமாக இருக்கப் போவதில்லை.

இலவசக் கல்வியானது இலங்கை மாணவர்களுக்குக் கிடைத்துள்ள பெரும் கொடையாகும். தனியார் ரியூஷன் வகுப்புகளுக்குச் செல்வது என்பது பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மாணவர்களுக்கும், வறிய நிலையில் உள்ள மாணவர்களுக்கும் கிடைக்காத வாய்ப்பாகும். இவ்வாறான மாணவர்கள் அரசாங்கப் பாடசாலைகளில் இலவசக் கல்வியை மாத்திரமே நம்பியுள்ளனர் என்பதை ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் கவனத்தில் கொண்டு சேவை புரிவது அவசியம். எமது மாணவர்களின் கல்விக்கு வறுமையானது தடையாக அமைந்துவிடக் கூடாது என்ற கருணைமிகு சிந்தனை அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களின் உள்ளங்களில் உருவாகுவது அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# ஏழு ஆண்டுகளாக தொடரும் அறப்பணிகள் மூலம் மக்கள் உள்ளங்களில் வாழும் அன்னை புவனேஸ்வரி

உயிருடன் வாழ்ந்த போது குடும்பத்தின் மீது அதிகப் பற்றுடையவராக அன்புமழை பொழிந்தது மட்டுமல்லாமல், அயலவர்கள் மீதும் சமூகத்தின் மீதும் அளவற்ற பாசம் கொண்டு செயற்பட்டதனால் 'புவனேஸ்வரி அக்கா' என்று பலராலும் அன்னை புவனேஸ்வரி அழைக்கப்பட்டார்.

லண்டனில் தனது பிள்ளைகளுடன் வாழ்ந்த நிலையில் அவரது உயிர் பிரிந்த போதிலும், அவருடைய உள்ளம் என்னவோ அவர் வாழ்ந்த வவுனியா குடியிருப்பு கிராமத்தையும் அதனைச் சூழ்ந்த பகுதிகளிலுமே நாடியிருந்தது. இந்த சமூகப் பற்றின் காரணமாகவே அவரது உடல் அவரது குடும்ப வாரிசுகளினால் குடியிருப்பு இல்லத்திற்குக் கொண்டு வரப்பட்டு இறுதிக்கிரியைகள் நடத்தப்பட்டன.

வசதிகள் வாய்ப்புகள் இருந்த போதிலும், பிறந்த மண்ணையும் கூடி வாழ்ந்தவர்களையும் நினைவுகூர்ந்து அந்த சமூகத்துடன் ஒன்றித்திருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கம் கொண்ட அன்னை புவனேஸ்வரி அவர்களின் பிள்ளைகள் அவருடைய உடலுக்கு பூந்தோட்டம் மயானத்தில் தகனக் கிரியைகள் நிறைவேற்றினர்.

அத்துடன் வவுனியா பூந்தோட்டத்தில் அன்னை புவனேஸ்வரிக்கென ஓர் இல்லத்தை அமைத்து, அதற்கு 'அன்னை புவனேஸ்வரி இல்லம்' எனப் பெயர் சூட்டி, பல்வேறு சமூகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

காண்போர் எல்லோரினது கருத்தையும் கண்ணையும் கவரும் வகையில் அன்னை புவனேஸ்வரி இல்லம் கம்பீரமாக உயர்ந்து நிற்கின்றது. கல்வி, மருத்துவம், சமூகநலன் எனப் பல்வேறு வழிகளில் ஆண்டுதோறும் அவருடைய வருடாந்த நினைவுதினத்தன்று சமூகப் பணிகளை ஆற்றி பாதிக்கப்பட்டவர்களையும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களையும் அன்புடன் அரவணைத்து அவர்களுக்கான அத்தியாவசிய உதவிகளை அந்த இல்லத்தின் ஊடாக அவரது மக்கள் வழங்கி வருகின்றனர்.

இவ்வுலக வாழ்க்கையை நீத்த பின்னரும் அன்னை புவனேஸ்வரி அவருடைய சமூகத்தில் அன்பைப் பொழிபவராகவும் ஆதரவற்றவர்களையும் உதவிகள் தேவைப்படுவோரையும் அணைத்து ஆதரவளிப்பவராகவும் மக்கள் மனங்களில் வாழ்ந்து வருகின்றார்.

அந்த வகையில் அன்னை புவனேஸ்வரியின் அறப்பணிகள் ஆண்டுதோறும் மார்ச் மாதத்தில் அவரது நினைவு தினத்தன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய வசதிகள் குறைந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல், வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கான மருத்துவ முகாம் ஒன்றின் ஊடாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கல், பாடசாலைக்குச் செல்வதற்கு வசதியின்றித் தவிக்கும் மாணவர்களின் போக்குவரத்து வசதிக்கான துவிச்சக்கர வண்டிகளை வழங்கல், உயர் கல்வி வாய்ப்பைப் பெற்று பல்கலைக்கழகத்திற்குச் சென்று கல்வி பயில வசதியற்ற மாணவர்களைத் தேடிக் கண்டறிந்து அவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மாதாந்த நிதியுதவி வழங்கல் உள்ளிட்ட பணிகள் பின்வரும் விபரங்களுக்கமைய தொடர்ந்து இடம்பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



★2016 ஆம் ஆண்டு– 400 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், 100 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள்,

05 பிள்ளைகளுக்கு துவிச்சக்கர வண்டிகள், 05 பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா நிதியுதவி

★2017 ஆம் ஆண்டு_ 450 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், 100 மூக்குக் கண்ணாடிகள், 05 பிள்ளைகளுக்கான துவிச்சக்கர வண்டிகள், ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதியுதவி

★2018 ஆம் ஆண்டு_ 550 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், 100 மூக்குக் கண்ணாடிகள்,

07 பிள்ளைகளுக்கான துவிச்சக்கர வண்டிகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதியுதவி,

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 35 மாணவர்களுக்கு ஆயிரம் ரூபா வீதம் வைப்பில் இடப்பட்ட நிதியுதவிக்கான வங்கி சேமிப்புப் புத்தகங்களும் வழங்கப்பட்டன.

★2019 ஆம் ஆண்டு_ 575 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், 100 மூக்குக் கண்ணாடிகள், 05 சிறந்த மாணவர்களுக்கான கேடயங்கள், 10 பிள்ளைகளுக்கான துவிச்சக்கர வண்டிகள், மேலும் 03 மாணவர்களுக்கான பல்கலைக்கழகக் கல்விக்கான மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா நிதியுதவி

★2020 ஆம் ஆண்டு_ 577 கற்றல் உபகரணங்கள், 100 மூக்குக் கண்ணாடிகள், 10 பிள்ளைகளுக்கான துவிச்சக்கர வண்டிகள், 05 கேடயங்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாதாந்த நிதியுதவி

★2021 ஆம் ஆண்டு_ இந்த ஆண்டு கொவிட் 19 நோய்த்தாக்கம் காரணமாக அன்னை புவனேஸ்வரி இல்லத்தில் வருடாந்த நினைவுதினத்தை நடத்த முடியாத நிலை காரணமாக வவுனியா பூவரசங்குளம் மகாவித்தியாலயத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன. அதன்படி 150 கற்றல் உபகரணங்கள், 01 பிள்ளைக்கான துவிச்சக்கர வண்டிகள்,

பூவரசங்குளம் மருத்துவமனைக்கு மருத்துவ சிகிச்சைக்கான விபரங்கள் பிரசுரிக்கப்பட்ட 500 கிளினிக் கொப்பிகளும் வழங்கப்பட்டன.

இவை மட்டுமன்றி அவ்வப்போது வவுனியா மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்ற நோயாளர்களின் வசதிக்காக படுக்கை விரிப்புகளும் வழங்கப்பட்டன.

அன்னை புவனேஸ்வரியின் உயர் கல்வி உதவி நிதியின் மூலம் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்கள் அரச துறைகளிலும் தனியார் நிறுவனங்களிலும் நல்ல நிலையிலான பதவிகளை வகித்து வருகின்றனர் என்பதும், வசதியற்ற மாணவர்களின் பல்கலைக்கழகக் கல்விக்கான நிதியுதவி தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் 2022 ஆம் ஆண்டுக்கான அன்னை புவனேஸ்வரியின் ஏழாம் ஆண்டு நினைவு தினமாகிய 12.03.2022 ஆம் திகதி அவர் பெயரிலான அறப்பணிகள் இடம்பெறவுள்ளன.



பி.மாணிக்கவாசகம்...





## 'ஒற்றுமைக்கான ஒரு மில்லியன் மரங்கள்'

# சர்வதேச விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட Alliance Finance Co. PLC, (AFC) நிறுவனம்

கடந்த 65 ஆண்டுகளுக்கும் மேலான நிபுணத்துவம் கொண்ட கட்டுபடியான மற்றும் நிலைபேறான நிதித் தீர்வுகள் மூலம் தேசத்தை வலுப்படுத்தும் இலங்கையின் பழைமையான நிதி நிறுவனமான Alliance Finance Co. PLC, (AFC), மற்றுமொரு சர்வதேச விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. இந்த முக்கியமான விருதை AFC வெல்வதற்கு 'ஒற்றுமைக்கான ஒரு மில்லியன் மரங்கள்' திட்டம் உதவியுள்ளது.

Karlsruhe Sustainable Finance Awards 2021 (நிலைபேறான நிதி விருதுகள்) ஆனது நிலைபேறான வளர்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பினால் (EOSD) நடத்தப்படுகிறது. இது உலகளாவிய ரீதியில் நிலைபேறான தன்மைப் பிரிவில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களுக்கு விருதுகளை வழங்குகிறது.

201 8 ஆம் ஆண்டு AFC இனால் ஆரம்பி க்கப்பட்ட 'ஒற்றுமைக்கான ஒரு மில்லியன் மரங்கள்' திட்டம், 2024ஆம் ஆண்டளவில் இலங்கை முழுவதும் ஒரு மில்லியன் மரங்களை நடுவதை இலக்காகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டமானது, 2030ஆம் ஆண்டளவில் இலங்கையின் காடுகளின் பரப்பளவை 32% ஆக அதிகரிக்க வேண்டும் எனும் 'இலங்கையின் மீளக் காடாக்குதல்' சவாலுக்கும் பங்களிப்புச் செய்கிறது.

ஒரு மில்லியன் மரங்கள் நடும் இலக்கைக் கொண்டுள்ள இந்த தேசிய திட்டத்திற்கு AFC குறிப்பிடும்படியான அதன் பங்களிப்பை வழங்கும். இந்த திட்டத்தின் கீழ், வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA), லயன்ஸ் கிளப், இலங்கையின் முப்படைகள், பல்வேறு பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், மத வளாகங்கள், மாநகர சபைகள், நகர சபைகளுடன் இணைந்து 360,000 மரங்களை AFC நடுகை செய்துள்ளது. அனைத்து நெடுஞ்சாலைகள், வீதி வலையமைப்புகள், நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம், பாடசாலைகள், குறிப்பாக வழிபாட்டுத் தலங்களில் இந்த மரங்கள் பரவலாக நடப்பட்டுள்ளன. இந்தத் திட்டமானது அதன் பங்குதாரர்களுக்கு பல சமூகரீதியான நன்மைகளை உருவாக்கியுள்ளது. அதில் ஒன்று 2030ஆம் ஆண்டளவில் சூழலிலுள்ள 120,000 மெட்ரிக் தொன் காபனீரொட்சைட்டை குறைப்பதாகும். இந்தத் திட்டத்திற்கான பிரதான தாவர விநியோகஸ்தர், சமூக தொழில்முனைவோரான ஜயந்த பாலசிங்க ஆவார். அவர் தனித்துவமான 'Ath Pavura' எனும் சமூக வணிக தளத்தின் மூலம் உருவானவராவார். அதில் AFC நிறுவனமும் ஒரு ஸ்தாபக பங்காளராக உள்ளது.



ஜயந்த பாலசிங்கவின் அமைப்பான 'துருவியன' ஆனது ஏற்கனவே நடுகை செய்யப்பட்டு வளர்க்கப்பட்ட செடிகளை மற்றொரு இடத்தில் நடுவதற்காக வழங்கி வருகிறது. இதன் மூலம் தாவரங்கள் உயிர் வாழ்வதற்கான சிறந்த வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. எமது அனைத்துத் திட்டங்களுக்கும் துருவியனவை பிரதான விநியோகஸ்தராக ஆக்கியுள்ளதன் மூலம், இந்த சமூக அக்கறை கொண்ட நிறுவனத்தின் வளர்ச்சிக்கு AFC உதவுவதோடு அதன் ஊழியர்களுக்கு வாழ்வாதார ஆதரவையும் வழங்குகின்றது. இந்தத் திட்டத்தின் விளைவானது, ஐ.நா.வின் நிலைபேறான வளர்ச்சி தொடர்பான பல்வேறு இலக்குகளை பூர்த்தி செய்வதில் நேரடியாகப் பங்களிக்கிறது.

# 31 ஆண்டு கால சிறைவாசத்தின் பின்னர் முதல் தடவையாக வழங்கப்பட்ட பிணை!

## பேறறிவாளனுக்கு திருமண ஏற்பாடு; விவசாயம் செய்வதற்கு விருப்பம்

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சுமார் 31 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வந்த பேறறிவாளனுக்கு நேற்று முன்தினம் உச்சநீதிமன்றம் பிணை வழங்கியது. ஜோலார்பேட்டை பொலிஸ் நிலையத்தில் மாதத்தின் முதல் வாரத்தில் பேறறிவாளன் தவறாமல் கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவுக்கு தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் வரவேற்புத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பேறறிவாளன் தாயார் அற்புதம்மாள் திருப்பத்தூரில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். 'உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. எனது மகனின் உடல்நிலை சீராக உள்ளதற்கு முக்கிய காரணம் 9 மாத காலமாக பரோலை நீடித்ததுதான். தற்போது சுதந்திரமாக இருப்பதால் திருமணம் செய்து கொள்வதாக பேறறிவாளன் கூறியுள்ளார். இதனால், முதல் ஏற்பாடாக பேறறிவாளனுக்கு திருமணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் எனது மகன் விவசாயத்தில் முழு ஈடுபாடு கொண்டவர்' என்று அற்புதம்மாள் தெரிவித்தார்.

"இப்போதைக்கு அதற்கான பொருளாதார வசதி இல்லை. வருங்காலத்தில் கண்டிப்பாக விவசாயத்தில் பேறறிவாளன் ஈடுபடுவார். 30 வருடங்கள் போராட்டத்திற்குப் பிறகு என் மகனுக்கு பிணை வழங்கப்பட்டது அளவில்லாத மகிழ்ச்சியாக உள்ளது. இதற்கு உறுதுணையாக இருந்த தமிழக அரசு மற்றும் முதலமைச்சருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன் என்று பேறறிவாளனின் தாயார் அற்புதம்மாள் கூறினார்.



இதன் பின்னர் பேறறிவாளனின் வழக்கறிஞர் சிவகுமார் செய்தியாளர்களிடம் பேசுகையில் " 7 பேர் விடுதலை தொடர்பாக ஆளுநர் எந்த முடிவும் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார். இது வருத்தம் அளிக்கிறது. 31 ஆண்டுகளில் சிறையில் அவருடைய நன்னடத்தையை பாராட்டியும், 10 மாத கால உடல்நிலையை கருத்தில் கொண்டும் இந்தப் பிணை வழங்கப்பட்டிருக்கிறது. நீண்ட நெடிய போராட்டத்தில் ஒரு சாமானியனுக்குக் கிடைத்த வெற்றி இது" எனக் குறிப்பிட்டார்.

"இதேபோன்று இந்தியா முழுவதும் வெற்றிக்காக போராடிக் கொண்டிருக்கும் எண்ணிலடங்காத நபர்களுக்கு இந்த உத்தரவு பெரும் ஊக்கத்தை அளிக்கும். நீதி கண்டிப்பாக கிடைக்கும் என்ற நம்பிக்கையை அனைவருக்கும் கொடுக்கும் வகையில் இந்த தீர்ப்பு அமைந்துள்ளது. இனி பேறறிவாளன் விடுதலை குறித்து கவனம் செலுத்துவோம் என்றார் சிவகுமார்.




# பேருவளை சீனன்கோட்டை அல்- ஸலாஹ் அரபுக் கல்லூரியின் இரு தசாப்த பயணம்

## கல்லூரியின் வரலாற்றுச் சுருக்கம்

எமது கல்லூரி சீனன்கோட்டை, அம்பேபிடிய ஹிஜ்ரா மாவத்தை பகுதியில் (ஹிஜ்ரி 1423 ரபீயுல் ஆகிர் பிறை 08) 10.07.2002ம் ஆண்டு வாடகை வீட்டில் மத்ரஸதுஸ் ஸலாஹ் என்ற பெயருடன் 02 உஸ்தாத்மார்கள், 22 மாணவர்களுடன் அல்குர்ஆன் ஹிப்ழ் மத்ரஸாவாக ஆரம்பிக்கப்பட்டது. அது இன்று அல்லாஹ்வின் கிருபையால் சீனன்கோட்டை அக்கரகொடை பிரதேசத்தில் அதற்கென சொந்த காணியில் பல கட்டடங்களுடன் பாரிய 05 பிரிவுகளாக சுமார் 300க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுடன் பயணித்து வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்!


கணனிப் பிரிவில் மாணவர்கள்

தற்போது எமது கல்லூரி ஹிப்ழ் பிரிவு, ஷரீஆ பிரிவு, பாடசாலை செல்லும் உள்ளூர் மாணவர்களுக்கான பகுதிநேரப் பிரிவு, பெண்கள் பிரிவு, அரச பாடசாலைக் கல்விப் பிரிவு என்ற 05 பெரும் பிரிவுகளுடன் சிறப்பான முறையில் முன்னேறி வருகிறது.

இக் கல்லூரியின் இரு தசாப்தங்கள் நிறைவை முன்னிட்டு இரு ஹாபிழ்கள் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அல்குர்ஆன் முழுவதையும் தனித்தனியே ஒரே நாளில் மனனமாக ஓதி ஒப்புவிப்பார்கள்.

தமாம் செய்யும் அல்குர்ஆனின் நன்மைகளை மர்ஹூம்களான குறித்த மாணவர்களின் குடும்பத்தினர் மற்றும் எமது கல்லூரிக்காக பாடுபட்டவர்கள் இன்னும் கொரோனா அலைகளினால் மரணித்தவர்கள் அனைவருக்கும் குறிப்பாக எமதூரைச் சேர்ந்த சகோதர சகோதரிகளுக்கும் ஈஸாலுஸ்ஸவாப் செய்ய இருக்கிறார்கள்.

### எமது கல்லூரியின் தோற்றமும் வளர்ச்சியும் ஒரு பார்வை...

### கல்லூரியின் உருவாக்கம்;

பல சிறப்புகள் கொண்ட எமதூரில் அருள் மறையாம் அல்குர்ஆன் மனனம் செய்யும் ஹாபிழ்களுக்கான மத்ரஸா ஒன்றின் தேவை காலாகாலம் தொடர்ந்து வந்தது. அதன் முதல் மஷூராக் கூட்டம் 2001ஆம் ஆண்டு அன்று சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆ மஸ்ஜிதில் நடைபெற்றது. இதன் பயனாக ஹாஜிகளான எம். எஸ்.எம். றஸ்வி, எம்.எஸ்.எம் ரிப்கான் ஆகியோரின் அனுசரணையுடன் களுத்துறை மாவட்டத்தோடு மட்டுப்படுத்தப்பட்டதாகஒரு ஹிப்ழு மத்ரஸா ஆரம்பிப்பதென முடிவு செய்யப்பட்டது.

### ஹிப்ழ் (அல் குர்ஆன் மனன) பிரிவு;

அல்லாஹ்வின் கிருபையால் 2002.07.10 (ஹிஜ்ரி 1423 ரபீஉல்ஆகிர் 08) அன்று ஹிஜ்ரா மாவத்தை பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் மஸ்ஜிதுக்குப் பக்கத்தில் வாடகை வீடொன்றில் 'மத்ரஸதுஸ் ஸலாஹ்' பெயரில் 2 உஸ்தாத்கள், 22 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது.

## இரு ஹாபிழ்கள் ஒரே நாளில் அல்–குர்ஆனை மனனமாக ஓதும் நிகழ்வு


வகுப்பறை கற்பித்தலில்

இதன் திறப்பு விழா மர்ஹூம் கலீபதுஷ்ஷாதுலி அல் ஹாஜ் எம்.ஐ.எம். மன்சூர் ஆலிம் (பஹ்ஜி) அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதன் பாடத்தை மர்ஹூம் ஷைகுல் பலாஹ் அப்துல்லாஹ் ஹஸ்ரத் ஆரம்பித்து வைத்தார்கள்.

சுமார் 1 வருடத்தில் 2003.07.25 நமது ஊரைச் சேர்ந்த ஒருவர் முதலாவது ஹாபிழானார். தற்பொழுது கல்லூரி 20 வருடங்களைப் பூர்த்தி செய்த நிலையில் ஹிப்ழ் பிரிவு 111 ஹாபிழ்களை உருவாக்கியுள்ளது. அல்ஹம்துலில்லாஹ்!

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் எமது கல்லூரி 2005.07.08 அன்று MRCA/13/1/HQ/70 என்ற இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டதோடு கல்லூரியின் வளர்ச்சிக்கேற்ப 2007.12.10ம் திகதியில் MRCA/13/1/PAS/90 என்று தரமுயர்த்தப்பட்டது.

### கிதாபுப் பிரிவு

2 1/2வருடங்களின் பின்னர் கல்லூரியின் வளர்ச்சிக்கேற்ப இடமாற வேண்டியேற்பட்டது. இவ்வேளையில் ஒரு பிரமுகர் முன்வந்து எந்த வாடகையும் பெறாமல் தமது வீடொன்றைத் தந்துதவினார். பின்னர் மத்ரஸாகென சொந்தமாக இடம் வாங்கப்பட்டு மத்ரஸா கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.

12.10.2003 அன்று இதற்கான அடிக்கல்லை மரியாதைக்குரிய பெருந்தகை மர்ஹூம் எம்.ஐ. எம். நளீம் ஹாஜியார் அவர்களால் அடிக்கல் நட்டி வைக்கப்பட்டது. அல்லாஹ்வின் கிருபையால் முதல் மாடி பூர்த்தி செய்யப்பட்டு


கல்லூரி நூலகப் பகுதி

26.02.2006 அன்று புதுக்கட்டிடம் திறப்பு, கிதாபுப் பாடப்பிரிவு ஆரம்பம், ஹாபிழ்கள்களை பாராட்டுதல் என முப்பெரும் விழாவாக வெகு விமர்சையாக கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. மர்ஹூம் முஹம்மத் ஜிப்ரி (ரஹ்மானி) ஹஸரத் அவர்கள் கட்டடத்தை திறந்து கிதாபுப் பாடத்தையும் ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

2012ம் ஆண்டு முதன்முறையாக 3 ஆலிம்கள் 'ஸலாஹி' பட்டம் பெற்று வெளியாகியதோடு 2013ம் ஆண்டு 13 ஆலிம்களுக்கும் 50 ஹாபிழ்மார்களுக்குமான பட்டமளிப்பு விழாவும் 2017ம் ஆண்டு 28 ஆலிம்களுக்கும் 22 ஹாபிழ் மார்களுக்குமான 2வது பட்டமளிப்பு விழாவும் மிகவும் விமர்சையாக நடைபெற்றது.


கல்லூரியில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வு

வெளியான ஆலிம்களில் தற்போது 2 பேர்கள் B.A பட்டம் பெற்றிருப்பதோடு ஏனைய உலமாக்கள் உஸ்தாத்மார்களாகவும், இமாம்களாகவும் தஃவா பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் 6 பேர் எமது கல்லூரியிலேயே கடமை புரிந்து வருகிறார்கள்.

தற்போது அதிபர், உஸ்தாத்மார்கள், முஅல்லிமாக்கள் மற்றும் ஊழியர்கள் என எமது 5 பிரிவுகளிலும் 30 பேர் கடமை புரிகிறார்கள். கிதாப் மற்றும் ஹிப்ழ் பிரிவுகளில் 88 மாணவர்களும் பகுதிநேரப் பிரிவில் 96 மாணவர்களும் பெண்கள் பிரிவில் 113 மாணவிகளும் பயில்கி


இல்ல விளையாட்டுப்போட்டி

றார்கள்.

இதுவரை 62 ஆலிம்களும் 114 ஹாபிழ்களும் வெளியாகியுள்ளதோடு பகுதி நேரப்பிரிவில் 36 மாணவர்களும் பெண்கள் பிரிவில் 63 மாணவிகளும் கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### பெண்கள் பிரிவு

பெண்களுக்கான மார்க்க வகுப்புகள் எமது ஊரிலும் நடைபெற வேண்டுமென்ற ஆசையுடன் அல்லாஹ்வின் கிருபையால் (ஹிஜ்ரி 1440 முஹர்ரம் பிறை 19) 2018.09.29 அன்று சுமார் 105 பெண்களுடன் 5 முஅல்லிம்களும் ஆறு முஅல்லிமாக்களும் இணைந்ததாக ஆரம்பிக்கப்பட்டு ஆங்கிலத்திலும் தமிழிலும் நடைபெற்று வருகிறது.

2022.01.30 அன்று, முதலாவது தொகுதியினருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் இரண்டாம் தொகுதியினரை இணைத்துக் கொள்ளும் நிகழ்வும் நடைபெற்றது.

### அரச பாடசாலை பாடப்பிரிவு

எமது கல்லூரி ஸ்தாபிக்கப்பட்ட நாளிலிருந்து அரச பாடசாலை கல்வி முறைமை அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. புதிதாக உள்வாங்கப்படும் மாணவர்கள் பாடசாலையில் இறுதியாக கற்ற வகுப்பின் பிரகாரம் எமது கல்லூரியில் பாடசாலை வகுப்பில் சேர்க்கப்படுவார்கள். தற்போது எமது கல்லூரியில் காலையில் மத்ரஸா, மாலை பாடசாலை வகுப்புகள் என்ற திட்டத்தில் நாளாந்தம் வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்காக அரச பாடசாலைகளில் கற்பிக்கும் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் வருகை தருகின்றனர். இதுவரை 8 தொகுதியினர் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.


வகுப்பறை கற்பித்தலில்

### பகுதிநேரப் பிரிவு

பகுதி நேரப்பிரிவு 2011.10.10 திகதியன்று 35 மாணவர்கள், 02 ஆசிரியர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு மார்க்கத்தின் முக்கிய விடயங்கள் தொடர்பாக கற்றுக் கொடுக்கப்படுவதோடு இமாமத், ஜனாஸாத் தொழுவித்தல், கிராஅத் ஓதுதல், வாராந்த தர்பியா மற்றும் மன்றங்களும் நடைபெறுகின்றன. இதுவரை இப்பிரிவில் 36 மாணவர்கள் கற்கை நெறியை பூர்த்தி செய்துள்ளதுடன் மூன்று மாணவர்கள் அல்குர்ஆனை மனனம் செய்து இருப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்த ஹாபிழ்களை கௌரவிக்கும் நிகழ்வில் ஊரிலுள்ள ஹாபிழ்கள், ஹாபிழாக்கள் அனைவரும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

தற்போது இப்பிரிவில் 99 மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருப்பதுடன் 7 உஸ்தாத்மார்கள் கடமை புரிகின்றனர்.

அதிகமானவர்கள் இணைய விருபிம்பியும் இடப்பற்றாக்குறையின் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உள்வாங்கப்படுகின்றனர்.

எமது கல்லூரியில் மேலதிகமாக கணனியறிவும் மொழி விருத்திக்காக தமிழ், சிங்களம், அரபு, உருது போன்ற மொழிகளில் மன்றங்களும், இல்ல விளையாட்டுப் போட்டிகளும் கண்காட்சி மற்றும் கல்விச் சுற்றுலா பயணங்களும் நடைபெற்று வருகின்றன.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உடலாலும் பொருளாலும் சிந்தனையாலும் உழைத்த உழைக்கின்ற அனைவரும் ஈருலகிலும் சகல சௌபாக்கியங்களை அடைந்து மென்மேலும் பரக்கத்துகள், ஆபியத்துகள் கிடைக்க பிரார்த்திக்கிறோம்.


சுற்றுலாவின்போது யாழ். நூலக வளாகத்தில்

எம்.எப்.எம். அஜ்வாத் பாஸி

## கச்சதீவு புனித அந்தோனியார்...

அனைத்தும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி நடைபெறும் என்றும் இன்றைய தினம் இரவு விசேட வெஸ்பர்ஸ் ஆராதனையும் நாளை காலை திருவிழா கூட்டுத்திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

தமிழக இராமநாதபுரம் மறைமாவட்டத்தின் வேர்க்காடு பங்குத்தந்தை தேவசகாயம் அடிகளார் தலைமையில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 100 பக்தர்கள் திருவிழாவில் கலந்துகொள்ளவுள்ளதாகவும் இலங்கையில் யாழ் மறைமாவட்டத்தின் நெடுந்தீவுப் பங்குத் தந்தையின் ஏற்பாட்டில் இலங்கை பக்தர்கள் 100 பேருக்கு உட்பட்டவர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

01. வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வேலைகளுக்காக முன் தகைமையுள்ள கேள்விதாரர்களால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | பெறுகை இலக்கம் | வேலையின் பெயர் | பொறியியலாளர் மதிப்பீட்டும் பெறுமதி (வெட் இன்றி ரூ. மில்லியன்) | CIDA நிறுவனத்தின் பதிவு | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்ப கட்டணம் (ரூ.) | கேள்விப் பிணைப் பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20-B-01-2022 | யால தேசிய பூங்காவின் இல. 21 உத்தியோகபூர்வ இல்லம் பழுதுபார்த்தல் | 4.8 | C5/C6/C7/C8 (கட்டிடங்கள்) | 2000.00 | 73,000/- 2022.06.10 வரை செல்லுபடியாதல் வேண்டும் |
| 02 | WL/02/20-T-03-2022 | குமன தேசிய பூங்காவின் அளுத்கம வேலி மறுசீரமைத்தல் | 6.5 | C5/C6/C7 (நீர்ப்பாசனம்) | 2500.00 | 98,000/- 2022.06.10 வரை செல்லுபடியாதல் வேண்டும் |
| 03 | WL/02/20-R-01-2022 | உடவலவ தேசிய பூங்காவின் ஆக்கிரமித்துள்ள தாவரங்களை அகற்றுதல் | 11.9 | C5/C6 (நீர்ப்பாசனம் | 5,000.00 | 179,000/- 2022.06.24 வரை செல்லுபடியாதல் வேண்டும் |
| 04 | WL/02/20-R-02-2022 | லுனுகம்வெஹெர தேசிய பூங்காவில் ஆக்கிரமித்துள்ள தாவரங்களை அகற்றுதல் | 11.5 | C5/C6 (நீர்ப்பாசனம்) | 5,000.00 | 173,000/- 2022.06.24 வரை செல்லுபடியாதல் வேண்டும் |

02. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் நடைபெறும்

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களை 2022.03.30 வரை அரச வேலை செய்யும் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை பத்தரமுல்ல வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் சகல கேள்விதாரர்களாலும் கடந்த 06 மாத வங்கிக் கூற்று மற்றும் 05 வருடங்கள் உற்படுத்தப்பட்டு முடிவுறுத்தப்பட்ட அதற்குச் சமமான 02 வேலைகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன் 10 மில்லியனுக்கு மேற்பட்ட வேலைகளுக்கு கேள்வி ஆவணங்களில் கோரப்படும் தகைமைகளை உறுதி செய்வதற்காக ஏற்றுக் கொள்ளக் கூடிய அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

05. கேள்வி ஆவணங்களை ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை 2022.03.30ம் திகதி வரை வன சீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெயரில் குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் மேற்கொள்ளப்படும் எழுத்து மூல வேண்டுதல் மற்றும் CIDA பதிவுப் புத்தகம் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

06. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் குறித்த செயற்திட்டங்களை பரீட்சித்துப் பார்த்து கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

07. மேற்படி கேள்வி பிணையை வங்கி மூலம் சமர்ப்பிப்பதாயின் தரப்பட்டுள்ள பெறுமதி தரப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகுமாறு அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அதனை காசாக செலுத்துவதாயின் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்களுடன் கேள்வி பிணையை சமர்பித்திராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின கீழ் 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்காக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்து PCA03 சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவ்வாறல்லாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

08. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறு வேறாக கடித உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிடடு 2022.03.31 பி.ப. 2.30 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகளை திறத்தல் அன்றே (2022.03.31) பி.ப. 2.30 இற்கு இடம்பெறுவதுடன் அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

09. கேள்விப் பத்திரங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் 0112 871537 தொ. பே. மூலம் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் (நிதி)ஐ அழைத்து பெற்றுக் கொள்ளலாம. கேள்விப் பத்திரங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் உரிமை திணைக்கள பெறுகைக் குழுவிற்கு உரியதுடன், இவ் அறிவித்தலில் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது குறிப்பிடப்படாத இப் பெறுகை விடயங்களுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயங்கள் பற்றிய தீர்மானம் பெற்றுக் கொள்ளும் அதிகாரம் வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியது.

10. கேள்விப்பத்திரங்களைத் தயாரித்தல் சம்பந்தமாக ஏற்படுகின்ற எந்த ஆகு செலவுகள் சம்பந்தமாக தலைவர், திணைக்கள பெறுகைக் குழுவினால் பொறுப்புக்கூறப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்பத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்ல.**

INDUSTRY கைத்தொழில் SRI LANKA 4.0 INDUSTRY

# தேசிய கைத்தொழில் சிறப்பு விருதுகள் - 2022

IDB கைத்தொழில் அபிவிருத்திச் சபை Industrial Development Board

# சமையல் கலையை மேம்படுத்தும் ஃப்ரீலான் எண்டர்பிரைசஸ்



லானி பி கமகே தனது மனைவி யூபி ஜெயவதியுடன் இணைந்து தனது கனவை மெய்ப்பட வைத்தபோது இது ஆரம்பித்தது. அந்தச் சிறிய அடி இலங்கையின் மசாலாத் துறையையும் சமையல் துறையையும் வேறோர் பரிமாணத்துக்கு இட்டுச் சென்றது 1984 ஆம் ஆண்டில் இந்த ஜோடி சமையல் தொழிலை மசாலாப் படுத்துவதற்கான வாய்ப்பைத் தேடிக்கொண்டிருந்தது.

ஃப்ரீலான் இப்போது மசாலா வர்த்தகத்தில் அனைத்து வீடுகளிலும் உபயோகிக்கும் பெயராக மாறியிருப்பது அனைவருக்கும் தெரிந்த வரலாறு. இலங்கை இல்லத்தரசிகள் மத்தியில் ஃப்ரீலான் தனது இடத்தை நிலைநிறுத்த அதிக காலம் எடுக்கவில்லை. இது ஒரு சிறிய முயற்சியில் தொடங்கிய ஒரு நம்பிக்கையான பயணம்.

இலங்கையின் மசாலாத் துறைக்கு ஒரு நீண்ட கதை உள்ளது. கதை, நிச்சயமாக, 7ஆம் நூற்றாண்டுக்கு பின்னோக்கிச் செல்வதாக இருக்கலாம். மேற்கத்தியர்கள் நாகரீகத்திற்காக போராடிக் கொண்டிருந்தபோது, எமது நாடு மசாலா நிறைந்த நாடாக இருந்தது. மசாலாவுக்கு மட்டுமல்ல. ஆனால் அதன் தனித்தன்மைக்காக எமது நாடு அறியப்பட்டது.

இலங்கை, தப்ரோபேன் என அறியப்பட்ட காலத்திலிருந்து, மொத்தமாக மசாலாப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டிருந்தது. ஏற்றுமதிகள் அவற்றின் சொந்த பெறுமதி சேர்வைகளைக் கொண்டிருந்தன. வெளிநாட்டுச் சந்தையில் கிடைக்கும் மசாலாப் பொருள்கள் என்ன வர்த்தக நாமங்களில் இருந்தாலு எவ்வளவு விலை உயர்ந்தாலும், அது இலங்கை மசாலாதான். சாதாரண மனிதனுக்கு எட்டாத விலையில் இருந்தாலும் அது இலங்கை மசாலாதான்.

ஃப்ரீலான் 2003இல் பதிவுசெய்யப்பட்டது. இருபது ஆண்டுகளுக்கு முன், ஃப்ரீலான் மசாலாத் துறையில் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. மாத்தறையை தளமாகக் கொண்ட ஃபரீலான் இலங்கை முழுவதும் 80,000க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களைக் கொண்டுள்ளது. லங்கா சதொச, கார்கில்ஸ், லாஃப்ஸ் மற்றும் ஆர்பிகோ போன்ற பல்பொருள் அங்காடி வலையமைப்பிலும், 38 விற்பனை நிலையங்களை உள்ளடக்கிய அவர்களது சொந்த ஃப்ரீலான் ஸ்மார்ட் எக்ஸ்பிரஸ் வலையமைப்பிலும் இந்த விற்பனை நிலையங்கள் கிடைக்கின்றன. சுமார் 16 விற்பனை நிலையங்கள் மேற்கு



மாகாணத்திலும் மற்றவை தெற்கிலும் உள்ளன.

ஃபிரீலான் குழுவிற்கு 2022 ஆம் ஆண்டு மிக முக்கியமானதாக உதயமானது, நிறுவனம் சிறந்த பெரிய அளவிலான தொழில் வகைக்கு வழங்கப்படும் மதிப்புமிக்க பிளாட்டினம் விருதினால் பாராட்டப்பட்டது. தேசிய தொழில்துறை சிறப்பு விருதுகள் 2022 இல் மசாலா தொடர்பான தொழில்களுக்கான தங்க விருது, அதற்குக் கிடைத்த மற்றொரு அங்கீகாரம்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்கும் இலங்கையின் தலைசிறந்த கைத்தொழில்களை கௌரவிக்கும் தேசிய தொழில்துறை இந்த சிறப்பு விருதை வழங்கியது.

ஃப்ரீலான் உற்பத்திகளில் மசாலாப் பொருட்கள், சிறப்பு மசாலா கலவைகள், சோயா, நூடுல்ஸ், பாஸ்தா, அப்பிடைசர்கள் மற்றும் தானியங்கள் ஆகியவை அடங்கும்.

வாடிக்கையாளரே ராஜா என்ற கருத்தை அவர்கள் கடைபிடிக்கின்றனர், எனவே முறையான தர முகாமைத்துவத்தைப் பின்பற்றி மலிவு விலையில் சிறந்த தரமான தயாரிப்புகளுக்கு பெயர்பெற்றது ஃப்ரீலான், மூலப்பொருட்கள் முதல் இறுதிப் பொருட்கள் வரை அவற்றின் தர நிர்வாகத்தில் தொடர்ச்சியான ஆய்வுகளைச் செய்வதை வழக்கமாக்கியுள்ளது. ஒவ்வொரு மணி நேரத்திற்கும் சுமார் 150 சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தயாரிப்புகளின் தரத்திற்கான சான்றிதழ்கள் GMP சான்றிதழ், ACCP சான்றிதழ், அனைத்து தயாரிப்புகளுக்கும் ISO 22000 தரச் சான்றிதழ் மற்றும் சில தயாரிப்புகளுக்கான SLS சான்றிதழால் அங்கீகரிக்கப்படுகின்றன. ஃப்ரீலான் தயாரிப்புகள் புத்துணர்ச்சி, நறுமணம் மற்றும் நிறத்திற்காக அறியப்படுகிறது.

ஃப்ரீலான் 700 உள்நாட்டு மற்றும் 300 விற்பனை பிரதிநிதிகள் உட்பட 1000 பணியாளர்களுக்கு பணி வழங்கியுள்ளது.

7க்கும் மேற்பட்ட வெவ்வேறு துறைகளுடன், ஒவ்வொரு துறையும் ஒரு துறைத் தலைவருடன் ஃப்ரீலான் மிகவும் உறுதியான நிர்வாக அமைப்பைக் கொண்டுள்ளது.

ஃப்ரீலான் எண்டர்பிரைசஸின் முக்கிய துறைகளில் சந்தைப்படுத்தல் துறை, விற்பனைத் துறை, நிதித் துறை, மனிதவளத் துறை, தர மேலாண்மைத் துறை, உற்பத்தித் துறை தளபாடங்கள் மற்றும் திட்டமிடல் துறை ஆகியவை அடங்கும்.

ஊரடங்கு காலத்தில் கூட, ஃப்ரீலான் 24 மணிநேரமும் பாதிக்கப்படாமல், அச்சமின்றி உழைத்து, தேசம் பசியின்றி இருப்பதை உறுதி செய்தது. மஞ்சள் மற்றும் குரக்கன் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுடன், ஃப்ரீலான் தனது தயாரிப்புகளுக்கான தொடர்ச்சியான விநியோகச் சங்கிலித் தேவைக்கு பொருட்களை வழங்குவதற்காக ஒரு பெரிய வேளாண் செயலாக்கத் திட்டத்தைத் தொடங்கியது.

ஃப்ரீலான் தயாரிப்புகளுக்கு ஆண்டுதோறும் தேவைப்படும் மஞ்சளில் பாதி அளவு இப்போது வேளாண் செயலாக்கத் திட்டத்தால் உள்நாட்டிலேயே கிடைக்கிறது. இம்முயற்சியானது உள்ளூர் விவசாயிகளை அவர்களது நிலங்களில் பயிரிடுவதற்கும், அவர்களின் விளைச்சலை நேரடியாக மூலப்பொருட்களாக வாங்குவதற்கும் தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது, ஃப்ரீலான் சந்தையின் தேவைகளைப் பூர்த்திசெய்து அவர்களின் தயாரிப்புகளை எந்த தடையும் இல்லாமல் நுகர்வோருக்கு வழங்க முடிந்தது. ஊரடங்கு காலத்தில் கூட ஊழியர்கள் பாதுகாப்பாக உணர்ந்தனர். ஃப்ரீலான் முகாமைத்துவப் பணிப்பாளர் பி.ஜி. ஜெயரத்னா கடின உழைப்பு மற்றும் செயல்திறனில் உறுதியான நம்பிக்கை கொண்டவர், இது தேசிய தொழில்துறை சிறப்பு விருதுகளில் அங்கீகாரம் பெற்றது. ஃப்ரீலான் தனது தயாரிப்புகளை நியூசிலாந்து, இத்தாலி, அவுஸ்திரேலியா, தென் கொரியா, சிங்கப்பூர் மற்றும் மாலைதீவுகள் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. இலங்கையில் சிறந்த தரம் வாய்ந்த மசாலா உற்பத்தி செய்யும் தொழில்களில் முதன்மையான ஒன்றாக ஃப்ரீலானை உருவாக்குவதற்கு இது வழி வகுத்துள்ளது.


**- பிரேமகீர்த்தி ஹுருலுவெவ**

**Advertising Supplements Department**
Coordinated by **Regina Ilancheliyan**

தேசிய தொழில் சிறப்பு - பெரிய வகை
**பிளாட்டினம் வெற்றியாளர்**

MATARA FREELAN

## தேசிய தொழில்துறை சிறப்பு விருதுகள் - 2022



தேசமான்ய, லங்காபுத்ரா, விஸ்வகீர்த்தி
**லன்னீ பி. கமகே**
நிறுவுனர் மற்றும் தலைவர்
ஃப்ரீலான் எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட்.










ஃப்ரீலான் எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. ஜெயரத்ன கமகே மற்றும் பணிப்பாளர் திருமதி. யசோதா ஜெயமினி பி. கமகே, அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் விமல் வீரவன்ச ஆகியோரிடமிருந்து விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

2022ஆம் ஆண்டுக்கான தேசிய தொழில்துறை விருதுகளில் இலங்கையின் பாரியளவிலான வர்த்தகத் துறையில் சிறந்து விளங்குபவர்களை அங்கீகரிக்கும் வகையில் Freelan Enterprises (Pvt) Ltd ஆனது பிளாட்டினம் விருதையும் மற்றும் பாரியளவிலான மசாலா உற்பத்தியாளர்களில் சிறந்து விளங்குபவர்களை அங்கீகரிக்கும் வகையில் தங்க விருதையும் வென்றது. இந்த இரண்டு விருதுகளையும் பெறுவதற்கு Freelan Enterprises (Pvt) Ltd தகுதி பெற்றது.

**இதை சாத்தியமாக்கிய எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

கைத்தொழில் அமைச்சு MINISTRY OF INDUSTRIES
IDB கைத்தொழில் அபிவிருத்திச் சபை INDUSTRIAL DEVELOPMENT BOARD

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 11ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

## ரமழானுக்கு தயாராகும் மாதம்

# ஷஃபான்

'அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் ஷஃபான் மாதத்தில் நோன்பு நோற்பது போன்று வேறு எந்த மாதத்திலும் நோன்பு நோற்பதை நான் காணவில்லை' என்று நான் கூறிய போது நபி (ஸல்) அவர்கள் 'இது ரஜப் மற்றும் ரமழான் மாதத்துக்கு இடைப்பட்ட மாதம். மனிதர்கள் அசிரத்தையாக இருக்கின்ற ஒரு மாதமும் கூட. அத்துடன் அகிலத்தாரின் இரட்சகனான அல்லாஹ்வுக்கு மனிதர்களின் செயல்பாடுகள் (அமல்கள்) சமர்ப்பிக்கப்படுகின்ற மாதமும் இதுவாகும். அதனால் நான் நோன்பாளியாக இருக்கும் நிலையில் எனது செயல்பாடுகள் அல்லாஹ்விடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று ஆசிக்கிறேன்' என்றார்கள் என உஸாமா இப்னு ஸைத் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**(ஆதாரம்: அபூ தாவூத், நஸாஇ, இப்னு ஹுஸைமா)**

ரஜப் மாதம் என்பது சங்கையான நான்கு மாதங்களில் ஒன்றாகும். அம்மாதத்தில் மனிதர்கள் அதிகம் நன்மைகளை செய்யவும் பாவங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளவும் முயற்சி செய்வார்கள். ரமழான் மாதத்தின் மகத்துவம் காரணமாகவும் நன்மையான காரியங்களை முன்னெடுப்பதற்கான தடைகள் குறைவாக இருப்பதனாலும் ரமழானில் அதிக நன்மைகளை செய்வார்கள். ஆனால் ஷஃபான் மாதத்தில் கவனயீனமாக இருந்துவிடக் கூடாது என்பதற்காகவே நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் என்று எங்களால் புரிந்து கொள்ள முடியும்.

செயல்பாடுகள் அல்லாஹ்விடம் சமர்ப்பிக்கப்படல் என்பது நான்கு வடிவங்களில் அமைய முடியும் என்று இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) அவர்கள் கருதுகின்றார்கள். நாளாந்தம், வாராந்தம், வருடாந்தம், மரணத்தின் பின்னர் இறுதியாக அல்லாஹ்விடம் உயர்த்தப்படுகிறது. நாளாந்த செயல்பாடுகள் பகலின் இறுதிப்பகுதியிலும் இருளின் கடைசி நேரத்திலும் உயர்த்தப்படுகிறது. வாராந்த செயல்பாடுகள் திங்கள், வியாழன் தினங்களிலும் வருடாந்த செயல்பாடுகள் ஷஃபான் மாதத்திலும் அல்லாஹ்விடம் சமர்ப்பிக்கப்படுகிறது. கடைசியாக மரணமடைந்த பின்னர் ஒருவரது செயற்பாடுகள் முழுமையாக அல்லாஹ்விடம் ஒப்புவிக்கப்படுகிறது. எனவே இத்தகைய சந்தர்ப்பங்களை நாம் சிறப்பாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

திங்கள், வியாழக்கிழமைகளில் நோன்பு நோற்பதற்கான காரணம் குறித்து நபிகளாரிடம் வினவப்பட்ட போது 'அவ்விரு தினங்களிலும் செயல்பாடுகள் ஒப்புவிக்கப்படுகின்றன. நான் நோன்பாளியாக இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்கு எனது அமல்கள் காட்டப்பட வேண்டும் என்று விரும்புகிறேன்' என்றார்கள்

**(ஆதாரம்: ஸுனன் திர்மிதி)**

நபியவர்கள் ஷஃபானில் அதிகமாக நோன்பு நோற்றார்கள். திங்கள் வியாழக்கிழமைகளில் நோன்பிருந்தார்கள். காலை மாலை திக்ருகளை ஓதினார்கள். அஸர், ஸுபஹ் தொழுகைகளை தூண்டினார்கள். மலக்குகள் அதிகமாக உலகில் சஞ்சரிக்கும் சந்தர்ப்பமாக இந்நேரங்களை கருத முடியும். இந்த மலக்குகள் தான் மனிதர்களின் பதிவுகளை சமர்ப்பிக்கவுள்ளார்கள்.

இரவு நேர மலக்குகளும் பகல் நேர மலக்குகளும் உங்களை பின் தொடர்ந்து கொண்டே இருப்பார்கள். ஸுபஹ், அஸர் நேர தொழுகைகளில் உங்களோடு அவர்கள் இணைந்து கொள்வார்கள். பின்னர் அவர்கள் அல்லாஹ்வை நோக்கி சென்று விடுவார்கள். எனது அடியார்கள் எப்படி இருந்தார்கள் என்று அல்லாஹ் கேட்பான். அதற்கு மலக்குகள் நாம் அவர்களை விட்டுவரும் போது அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். அவர்களை நாம் அடைந்த சந்தர்ப்பத்திலும் அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள் என்பார்கள்.

**(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)**

இத்தகைய சிறப்புகள் ஷஃபான் மாதத்துக்கு காணப்பட்டமையால் நபியவர்கள் நல்லரங்களை இம்மாதத்தில் அதிகமாக செய்துள்ளார்கள். 'ரமழான் மாதம் தவிர்த்து வேறு எந்த மாதத்திலும் நபியவர்கள் முழுமையாக நோன்பு நோற்கவில்லை. ஷஃபான் மாதத்தில் தான் நபியவர்கள் மிக அதிகமாக நோன்பு நோற்றார்கள்' என்று ஆயிஷா (ரலி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

**(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)**

**யூ.கே. றமீஸ் எம்.ஏ (சமூகவியல்)**

இவ்வகையில் ஷஃபான் மாதத்தை அடைந்திருக்கும் நாமும் இம்மாதத்தை சிறப்பாக பயன்படுத்தி நன்மைகளை அதிகமாக சேர்த்துக்கொள்ள முனைய வேண்டும். அல்லாஹ்வுடன் தொடர்பான விடயங்களுடன் மாத்திரம் சுருங்காது மனிதனுக்கு பயனுள்ள காரியங்களிலும் நாம் ஈடுபாடு காட்ட வேண்டும். செயல்படும் போது மனத்தூய்மை என்பது மிக முக்கியமானதாகும். 'இக்லாஸ்' அற்ற செயல்பாடுகள் பயனற்றவையாக மாறிவிடும் என்பதுடன் உலக விடயமாக கருதப்படும் விடயங்களைக்கூட நன்மை தரக்கூடிய விடயாக இக்லாஸ் மூலம் மாற்றியமைக்க முடியும். சண்டைகள், சச்சரவுகள், முரண்பாடுகள், பிளவுகளை களைந்து ஒற்றுமை, ஐக்கியம், மனிதம் மிகைக்கும் விதமாக நடந்து கொள்ள வேண்டும். அல்லாஹ்விடம் அதிகமாகக் கையேந்தி பிரார்த்தனைகளில் ஈடுபடுவதுடன் பாவங்களுக்கான மன்னிப்பையும் கோரி நிற்போம்.

ரமழான் நெருங்கும் போது அதனை வரவேற்பதற்காக வீடுகளை சுத்தம் செய்து ஒழுங்குபடுத்தி கொடிக்கம்பங்களை நட்டி வேறு பல காரியங்களின் மூலம் ரமழானை வரவேற்கும் மரபு நீண்ட காலமாக முஸ்லிம்களிடம் காணப்படுகிறது. ரமழானின் வருகை பற்றி அதிகம் பேசிக்கொள்வார்கள். ரமழானின் சிறப்புகளையும் அது தொடர்பான சட்ட திட்டங்களையும் அறிந்து கொள்வது தான் நோன்பை வரவேற்பதற்கான சிறந்த வழியாகும்.

அல் குர்ஆன், ஹஜ் குறித்து குறிப்பிடும் போது 'பிரயாணத்துக்கான கட்டுசாதனத்தை தயார்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் தயார்படுத்துகின்ற மிக சிறந்த பயண ஏற்பாடு 'தக்வா' என்ற இறையச்சமாகும்' **(அல் குர்அன் 02:197)** என்று குறிப்பிடுகிறது. இது போன்றே ரமழானின் நோக்கமான இறையச்சத்தை ஏற்படுத்திக் கொள்ளும் விதமாக ரமழானை வரவேற்பதே சாலச்சிறந்ததாகும்.

இவ்வகையில் தான் நபி(ஸல்) அவர்களும், தனது தோழர்களை ஷஃபானின் இறுதிப்பகுதியில் திரட்டி ரமழானின் சிறப்புகளை நினைவுபடுத்தி அதனை பயன்படுத்திக்கொள்ள ஆர்வமூட்டியுள்ளார்கள்.

'இதோ ரமழான் மாதம் வந்துவிட்டது. இது அருள் நிறைந்த மாதமாகும். இம்மாதத்தில் நோன்பு நோற்பது உங்களுக்கு கடமையாக்கப்பட்டுள்ளது. இம்மாதத்தில் சுவனத்தின் வாயில்கள் திறக்கப்படும். நரகத்தின் வாயில்கள் மூடப்படும். அட்டூழியம் புரியக்கூடிய ஷைத்தான்கள் விலங்கிடப்படும். இதிலே ஆயிரம் மாதங்களை விட சிறப்பான ஒரு இரவு உண்டு. யார் அதன் சிறப்புகளை அடையத் தவறிவிடுகிறாரோ அவர் தான் தவற விட்டவராவார்.

**(ஆதாரம்: நஸாஇ, ஸஹீஹுல் ஜாமிஃ அல்பானி)**

ரமழானைப் பயன்படுத்தும் நோக்கில் நபி (ஸல்) அவர்கள் ஷஃபான் மாதத்திலிருந்து தயாராகியுள்ளார்கள். நாமும் அவ்வாறே ரமழானை பயன்படுத்த எம்மை தயார்படுத்திக் கொள்வதுடன் திட்டமிட்டு ரமழானை பயன்படுத்துவோம்.

இதற்காகத் தனிப்பட்ட முறையில் அல் குர்ஆனுடன் தொடர்பினை ஏற்படுத்தல், தொழுகைகளை ஜமாஅத்தோடு தொழுதல், ஸுன்னத்தான வணக்கங்களில் ஈடுபடுதல் போன்றவற்றுடன் குடும்பமாக மனைவி பிள்ளைகளுடன் இணைந்தும் இவற்றை பேணிக்கொள்ள முடியும். ஸஹர் உணவுக்காக எழும்பியது முதல் மீண்டும் தூங்கச் செல்வது வரையான நாளாந்த வாழ்வை திட்டமிட்டு பயன்படுத்திக் கொள்ள முடியும்.

ரமழானில் அல் குர்ஆன் அருளப்பட்ட மாதம் என்ற வகையில் தான் நோன்புக்கு இவ்வாறான சிறப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வகையில் ரமழானில் அல்குர்ஆனுடனான தொடர்பை மேம்படுத்துவது மிகவும் அவசியமானதாகும். அல் குர்ஆனை இராகமாக ஓதி அதில் லயித்துப்போவதும் அதனை மனனமிடுவதுடன் அதன் கருத்துகளை உணர்ந்து பின்பற்றுவதும் அல் குர்ஆனுக்கு நம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளாகும். எனவே ரமழானுக்காக ஷஃபானிலே தயாராவோம்.

# மனிதன் தனது கரங்களால் தேடிக் கொள்பவை

எவரோ செய்த தவறினால் கொரோனா தோற்றம் பெற்று உலகிற்கே பெரும் சவாலானது. அதனால் உலக மக்கள் இத்தவறுக்கு விலை கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இவ்வாறு தான் உலகம் எதிர்கொண்டுள்ள எல்லா பிரச்சினைகளும் அமைந்திருக்கின்றன. ஒரு சிலர் புரிகின்ற தவறு, குற்றங்களின் விளைவுகளை எல்லா மக்களும் அனுபவிக்கும் நிலைமை காணப்படுகின்றது. சுற்றுச்சூழல் தொடர்பில் ஏற்பட்டுள்ள தாக்கங்களும் பாதிப்புகளும் இதற்கு நல்ல உதாரணமாகும்.

அதாவது தவறு செய்தால் அல்லாஹ் தண்டிப்பான் என்ற பயம் இல்லாமை, செல்வங்களைத் தர்மம் செய்யாது சுயநலத்துடன் செயற்படல், பணபலத்தில் ஏழைகளை உதாசீனம் செய்தல், குலப்பெருமையுடன் சண்டை சச்சரவுகளில் ஈடுபடல், மனிதர்களுக்கு மட்டுமே பூமி படைக்கப்பட்டது போன்று, இயற்கை மற்றும் பிற உயிரினங்களை அழித்தல், முறையற்ற வழிகளில் வருமானம் ஈட்டுதல் என்றபடி மனிதன் செய்கின்ற பலவிதமான தவறுகளின் விளைவாகவே உலகத்தில் குழப்பங்கள் ஏற்படுகின்றன. ஆனால் பாவங்களினால் ஏற்படும் விளைவுகள் குறித்து அல்லாஹ் தன் அருள் மறையில் இவ்வாறு எச்சரிக்கை செய்துள்ளான்,

'மனிதர்களின் கைகள் தேடிக் கொண்ட (தீச் செயல்களின்) காரணத்தால் கடலிலும், தரையிலும் (நாசமும்) குழப்பமும் தோன்றின. (தீமைகளிலிருந்து) அவர்கள் திரும்பிவிடும் பொருட்டு அவர்கள் செய்தார்களே (தீவினைகள்) அவற்றில் சிலவற்றை (இவ்வுலகிலும்) அவர்கள் சுவைக்கும்படி அவன் செய்கிறான்'.

**(அல் குர்ஆன்30:41)**

இதன்படி தரையிலும் கடலிலும் ஏற்பட்டுள்ள தாக்கங்களுக்கும் குழப்பகரமான நிலைகளுக்கும் மனிதனின் தவறான செயற்பாடுகளே அடிப்படைக் காரணங்களாக இருக்கின்றன. அதனால் இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு ஏற்ப மனிதர்கள் செயற்பட வேண்டும்.

அதேநேரம் மறுமை நாளில் இந்த உலகம் எப்படி இருக்கும் என்பதையும் அல் குர்ஆன் குறிப்பிட்டு வைக்கத் தவறவில்லை. 'அந்த நாளில் மனிதன் விரண்டு ஓடுவான். தன் சகோதரனை விட்டும், தன் தாயை விட்டும், தன் தந்தையை விட்டும், தன் மனைவியை விட்டும், தன் மக்களை விட்டும். அன்று ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் (அவல) நிலையே போதுமானதாயிருக்கும்.

**(அல் குர்ஆன் 80:3437)**

ஆகவே மறுமை நாளில் இறைவன் முன்பு நிற்கும் போது மனிதன் இவ் உலகில் வகிக்கும் பதவி, அதிகாரம், செல்வம் எதுவும் பயன் தராது. அச்சமயம் மனிதன் நிலை எப்படி இருக்கும் என்பதைவே இந்த வசனங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. அதனை அல்லாஹ்தஆலா, 'என் செல்வம் எனக்குப் பயன்படவில்லையே. என் செல்வாக்கும் அதிகாரமும் என்னை விட்டு அழிந்து விட்டதே' (என்று அரற்றுவான்). **(அல் குர்ஆன் 69:28, 29)** என்று குறிப்பிட்டு வைத்துள்ளான்.

அதனால் இந்த உலகம் மனிதர்களுக்கு மட்டுமுரியதல்ல, அனைத்து உயிரினங்களுக்குமானது. அந்த உணர்வுடன் செயற்பட வேண்டும். இதன் நிமித்தம் தவறுகளில் இருந்தும், பாவங்களில் இருந்தும் விலகி இருக்கவும். செய்த தவறுகளுக்கும், பாவங்களுக்கும் இறைவனிடம் பாவ மன்னிப்பு கோரவும் தவறக்கூடாது.

எனவே இறைவன் காட்டித் தந்துள்ள வழியில் தனது வாழ்வை மனிதன் அமைத்துக் கொள்வான் என்றால் இம்மையிலும், மறுமையிலும் அவனால் நிம்மதியான, மகிழ்ச்சியான வாழ்வை அனுபவிக்க முடியும். உலகமும் அமைதியும் சமாதானமும் நிறைந்த பூமியாக திகழும்.

**மின்ஸார் இப்றாஹிம்...**

# வாழ்வுக்கான அடிப்படைத் தேவை

ரமழானுக்கு 'ஷஹ்ருல்லாஹ்' 'இறைவனுடைய மாதம்' என்ற தத்துவப் பெயரும் உண்டு. இறைவனுடன் இணைத்து கூறப்படும் ஒவ்வொரு பெயருக்கும், பொருளுக்கும் ஒரு தனி மகத்துவம் உண்டு. சாதாரண ஒரு பொருள் இறைவனுடன் இணையும்போது, அதன் அந்தஸ்து உயர்ந்த இடத்தை அடைந்து விடுகிறது.

உதாரணமாக 'ரசூல்' என்றால் 'தூதர்' என்று பொருள். இதுவே 'ரசூலுல்லாஹ்' 'இறைவனின் தூதர்' என்று வரும்போது மற்ற தூதர்களை விடவும் இறைத்தூதருக்கு தனிச்சிறப்பு உண்டு.

ரமழான் இறைவனின் மாதமாக இருப்பதினால் அவனது கட்டளைப்படி அவனுக்காக உண்ணாமல், பருகாமல், விழித்தும், தனித்தும் இருக்க முடிகிறது. 'ஆதமுடைய மகன் செய்கின்ற ஒவ்வொரு செயலும் அவனுக்கே இருக்கிறது, நோன்பைத் தவிர. நோன்பு எனக்கு உரியது, அதற்கு நானே கூலி வழங்குகிறேன் என இறைவன் கூறுவதாக நபி (ஸல்) தெரிவிக்கிறார்கள்'.

**(ஆதாரம்: புகாரி)**

'எனக்காக நோன்பாளி தமது உணவையும், பானத்தையும், இச்சையையும் விட்டுவிடுகிறார். நோன்பு எனக்கு மட்டுமே உரியது. அதற்கு நானே கூலி கொடுப்பேன்' என்றும், மற்றொரு அறிவிப்பில் 'அதற்கு நானே கூலியாக இருப்பேன்' என்றும் இறைவன் குறிப்பிட்டுள்ளதாக நபி (ஸல்) கூறினார்கள்' என்று அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்.

ரமழான் இறைவனின் மாதமாக இருப்பதினால் ஏனைய மாதங்களை விடவும் இம்மாதம் முழுவதும் நோன்பு நோற்கின்றோம். மற்ற மாதங்களை விடவும் வணக்க வழிபாடுகளில் சிறந்ததாக அமைகிறது இம்மாதம். இதன் நாட்களும், இரவுகளும், பகல்களும், ஒவ்வொரு மணி நேரமும், ஒவ்வொரு வினாடியும் மற்ற மாதங்களை விடவும் உயர்வான இடத்தைப் பிடித்ததாக விளங்குகிறது.

ரமழானில் நோன்பாளிகளின் ஒவ்வொரு மூச்சும் இறைவனின் தஸ்பீஹ் (துதி பாடுவது) ஆகும். அவர்களின் அழகிய செயல்கள் நன்மைகளாகும். அவர்களின் வேண்டுதல்கள் நிறைவேற்றி கொடுக்கப்படும். இறைவன் ரமழானின் காலங்களையும், நேரங்களையும் அதன் மகத்துவம் கருதி மேன்மையாக வைத்துள்ளான். இந்த கால நேரங்களிலிருந்து ஒவ்வொரு முஸ்லிமும் பயனடைந்து கொள்ள வேண்டும். இக்காலத்தைப் பாக்கியமாக நினைத்து, தமது ஆயுளைப் பாக்கியம் நிறைந்த வணக்க வழிபாடுகளில் ஈடுபடுத்தி வளப்படுத்திக் கொள்ள வேண்டும். சொல்லையும், செயலையும் இறைதிருப்தியுடன் செயல்படுத்த வேண்டும்.

'காலத்தின் மீது சத்தியமாக! மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான். ஆயினும் இறை நம்பிக்கை கொண்டு, நல்லறங்கள் செய்வோரையும், உண்மையைப் போதித்து, பொறுமையையும் போதித்துக் கொள்வோரையும் தவிர'

**(அல் குர்ஆன் (103:13)**

என்று சுட்டிக்காட்டியுள்ளது.

'தேவையானவற்றைத் திரட்டிக் கொள்ளுங்கள். திரட்டிக்கொள்ள வேண்டியவற்றில் மிகச் சிறந்தது இறையச்சமே. அறிவுடையாரே, என்னையே அஞ்சுங்கள்' என்று **(அல் குர்ஆன் (2:197)** வழிகாட்டியுள்ளது.

எனவே, இந்த இறையச்சத்தையும், பேணுதலையும் வளர்த்துக் கொண்டு, வாழ்நாள் முழுவதும் அவற்றை கடைப்பிடிப்பதற்கு ஏற்ப வாழ்வை அமைத்துக் கொள்வோம்.

**அபூ முஷீரா...**

# இஸ்லாமிய வழிகாட்டலில் உழைத்து வாழ்வோம்!

மனிதர்கள் ஒவ்வொருவரும் தங்களது வாழ்க்கையை இனிதாக அமைத்துக் கொள்வதற்காக பல்வேறு வழிமுறைகளின் ஊடாக உழைத்தும் பிழைத்தும் வருகின்றார்கள். யார் எவ்வழிகளைப் பின்பற்றினாலும் அவ்வழிகள் யாவும் நேர்மையாகவும் நாணயமுள்ளதாகவும் இருக்க வேண்டும். அவ்வாறின்றி சன்மார்க்க நெறிமுறைகளிலிருந்து தவறிச் செல்வதாக அவை இருக்கலாகாது. அதாவது மனிதன் உழைத்துப் பெறும் பணம் ஹலாலான வழிகள் மூலம் தேடிய பணமாக இருப்பது அவசியம். எவரும் சட்ட விரோதமான குறுக்கு வழிகளிலும் பிறரை ஏமாற்றி வஞ்சித்தும் பணத்தை சம்பாதிப்பதென்பது சமூக விரோதச் செயல்களாக மட்டுமல்லாது அல்லாஹ்வின் பார்வையில் பாவமானதாகவும் ஹராமானதாகவும் அது அமைந்துவிடும்.

வியாபாரத்தின் போது அளவை நிறுவையில் மோசடி செய்வது, உண்மையை மறைத்து பொய்யைக் கூறுவது, உழைப்புக்கேற்ற கூலி வழங்காமல் இருப்பது போன்ற செயற்பாடுகளை இஸ்லாம் மிக மோசமான செயல்களாகக் கருதுகின்றது. அதனால் இவற்றை மனதிற் கொண்ட தமது உழைப்பை ஒவ்வொருவரும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

மனித வாழ்க்கைக்கு பணம் அவசியமான ஒன்று. குடும்பம் நடத்துவதிற்கும் குடும்பத்தின் மகிழ்ச்சி, நிம்மதிக்கும் பணம்தான் அடிப்படை. இது போன்று வாழ்க்கையின் எல்லாத் தேவைகளையும் சிறப்பாக முன்னெடுப்பதற்கு பணம் மிகவும் முக்கியமானது. இன்றைய உலகில் பணமின்றி எதுவும் செய்ய முடியது என்ற நிலை காணப்படுகிறது. அதற்காகப் பணத்தை எந்த வழியிலாவது சேர்த்துக்கொள்வதிலேயே கண்ணாக இருந்து காலத்தைக் கழிக்கும் போது சன்மார்க்க வழிமுறைகளை மறந்துவிடலாகாது. எல்லா சந்தர்ப்பங்களிலும் அல்லாஹ்வின் கட்டளைகளையும் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களையும் பின்பற்றி நடக்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் அரச, தனியார் தொழில்கள், கைத்தொழில், வியாபாரம் என பல்வேறு வகையான தொழில்களில் ஈடுபட்டு பணம் சம்பாதித்து வருகின்றனர். என்றாலும் எந்தத் தொழிலான போதிலும் அதனை பொறுப்போடும் திருப்தியோடும் செய்து முடிக்க வேண்டும். நாம் செய்யும் தொழில்களை மதிக்க வேண்டும். தொழில் செய்யும் எங்கள் மீது மற்றவர்களுக்கு நம்பிக்கை வர வேண்டும். தொழிலாளி தனது முதலாளிக்கு விசுவாசமாகப் பணிபுரிய வேண்டும். இது அரச தனியார்த்துறை உள்ளிட்ட அனைத்து துறையினருக்கும் பொருந்தும்.

அதேநேரம் தங்களுக்காகப் பணிபுரியும் ஊழியர்களை அன்பாக நடத்த வேண்டும். அவர்களுக்குரிய உரிமைகளை வழங்கி அவர்களை ஆதரிப்பதோடு. அவர்களது உழைப்புக்கேற்ற ஊதியத்தை உரியகாலத்தில் வழங்கிவிட வேண்டும். 'தொழிலாளிக்குரிய கூலியை அவனது வியர்வை காயமுன் கொடுத்து விட வேண்டும்' என நபி (ஸல்) அவர்கள் கூறியிருப்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

மேலும் தன் இரு கரங்களால் உழைத்துச் சாப்பிடுவதைவிட மேலான உணவை யாரும் சாப்பிடுவதில்லை' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே அல்லாஹ் விரும்பும் வழியில் இஸ்லாமிய வழிகாட்டல்களைப் பின்பற்றி உழைத்து சந்தோஷமாக வாழ முயற்சிப்போம். அது ஈருலகிலும் நன்மைகள் பெற்றுத்தரக்கூடிய காரியமாக இருக்கும்.

**எம்.ஏ. அத்தாஸ் ...**
**மாத்தறை.**



# புலமைக் கதிர்

## தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**மாணவர்களே! இம்மாதிரி வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுங்கள். இவ்வினாக்களுக்கான விடைகள் அடுத்த வாரம் புலமைக் கதிரில் வெளியிடப்படும்.**

**பின்வரும் பந்தியை வாசித்து விடை தருக.**

I. 'கூழானாலும் குளித்துக் குடி கந்தையானாலும் கசக்கிக் கட்டு' போன்ற முதுமொழிகள் நாம் உடற் சுத்தத்தைப் பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன அல்லவா? நாம் வாழும் சூழல் சுத்தமானதாகவும் காற்றோட்டமுடையனவாகவும் இருத்தல் மிகவும் அவசியமாகும். அப்பொழுதுதான் நோய் நொடிகளிலிருந்து நாம் விடுதலை பெற்று வாழலாம்.

1. மேலே குறிப்பிடப்பட்ட பந்தி நமக்கு வலியுறுத்திக் கூறுவது யாது?

………………………………………………………………………………

2. முதுமொழிகள் என்பதன் ஒத்தகருத்து யாது?

………………………………………………………………………………

3. உயர்திணை தன்மை பன்மைப் பெயர்ச்சொல் தருக?

………………………………………………………………………………

4. உடற்சுத்தம் எனும் சொல்லைப் பிரித்தெழுதுக.

………………………………………………………………………………

5. பந்தியிலுள்ள இணைமொழியொன்றினை எழுதுக.

………………………………………………………………………………

6. ஒத்த பொருள் தருக.
   i. கந்தை - ………………………………………………………
   ii. சுத்தம் - ………………………………………………………

**II. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக.**

7. அன்பு / நாம் / வேண்டும் / உயிர்களிடத்தில் / செலுத்த

………………………………………………………………………………

8. நினை / உள்ளளவும் / உப்பிட்டவரை

………………………………………………………………………………

**III. பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

9. சுதந்திரமற்று வாழ்பவன் ……………………… (அடிமை / கைதி)

10. கடற்கரையில் மீன்பிடித் தொழிலாளர்கள் தங்கியிருக்கும் இடம்

……………………… (வாடி / மாடி)

**IV. பின்வரும் பழமொழிகளைப் பூரணப்படுத்துக.**

11. ஆறிலும் சாவு ………………………………………………

12. தொட்டில் பழக்கம் ………………………………………………

**V. மரபுத் தொடருக்குரிய கருத்தை எழுதுக.**

13. முகம் மலர்தல் - ………………………………………

14. காது குத்துதல் - ………………………………………

**VI. பொருத்தமான சொல்லை எழுதுக.**

15. பனைக்கு வடலி போன்று வேம்புக்கு ………………………………………

16. ஆடு மந்தை போல மான் ………………………………………

**VII.**

17. ஆங்கிலத்தில் எழுதுக.

i. 

ii. 

i. ……………………… ii. ………………………


18. சிங்கள கருத்தை தமிழில் எழுதுக.
   i. நான் படிக்கின்றேன்

………………………………………………………………………………

   ii. நாங்கள் விளையாடுவோம்

………………………………………………………………………………

**VIII. படத்தை அவதானித்து கேட்கப்படும் கேள்விகளுக்கு விடை தருக.**




19. தோசையை விரும்புவோர் எத்தனை பேர்?

………………………………………………………………………………

20. பிட்டை மட்டும் விரும்புவோர் எத்தனை பேர்?

………………………………………………………………………………


21. இடியப்பத்தையும் தோசையையும் மட்டும் விரும்புவோர் எத்தனை பேர்?

………………………………………………………………………………


22. அதிகமானோர் விரும்புவது எந்த உணவை?

………………………………………………………………………………

23. சமச்சீர் அச்சுக்கள் சரியாக வரையப்பட்டுள்ள படத்தினை தெரிவு செய்க.




i. ii. iii.

24. 


இவற்றைக் கொண்டு ஆக்கக் கூடிய திண்ம உருவம் எது?

………………………………………………………………………………

25. 5 மணி கழிந்து 45 நிமிடம் என்பதை இக்கடிகார முகத்தில் குறித்துக் காட்டுக.




26. எண் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள எண்ணுக்கு முன்னால் வரும் எண்ணையும் பின்னால் வரும் எண்ணையும் தெரிக.




   i. முந்திய எண் ………………………
   ii. பிந்திய எண் ………………………

27. பின்வரும் எண்ணை சொற்களில் எழுதுக.

3703 ………………………………………………………………

28. நிழற்றப்பட்ட பகுதியின் பின்னம் யாது?



………………………………

29. இக்கடிகார முகம் காட்டும் நேரத்திற்கு 10 நிமிடங்களின் முந்திய நேரமென்ன?

………………………………………



(12ஆம் பக்கம் பார்க்க)



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

11 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

**IX. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. சர்வதேச ரீதியாக பொருட்களுக்கு வழங்கப்படும் தரச்சான்றிதழ்
i. SLS ii. ISO iii. LED

31. யானைக்கால் நோயினை உண்டு பண்ணும் நுளம்பு
i. அனோபிலஸ் ii. ஈடிஸ் iii. கியுலெக்ஸ்

32. அயடின் குறைபாட்டினால் ஏற்படும் நோய்
i. கண்டமாலை ii. தொண்டைக் கரப்பான் iii. நீரிழிவு

33. கொழும்பு நகரத்தில் கடலுடன் கலக்கும் நதி
i. களனி கங்கை ii. மகாவலி கங்கை iii. ஜின் கங்கை

34. சூரிய ஒளி மூலம் உடலில் உற்பத்தியாகும் விற்றமின் எது?
i. விற்றமின் A ii. விற்றமின் B iii. விற்றமின் D

35. நாம் சுவாசிக்க பயன்படும் வாயு எது?
i. காபனிரொட்சைட்டு ii. ஒட்சிசன் iii. நைதரசன்

36. பின்வரும் பொருட்களில் தனிநபர் பாவனைக்குரியது
i. அலுமாரி ii. வானொலி iii. சீப்பு

37. பொருளாதார நன்மைக்காக வளர்க்கப்படும் பிராணி அல்லாதது
i. அணில் ii. நாய் iii. பசு

38. பறக்கமுடியாத பறவை எது?
i. ஆந்தை ii. பென்குயின் iii. காட்டுக்கோழி

39. சூழல்நேய பூச்சிக் கட்டுப்பாட்டுத் திரவத்தைத் தயாரிக்கப் பயன்படும் வித்து
i. ஆமணக்கு ii. வேம்பு iii. நிலக்கடலை

40. சமைக்காது பச்சையாக உண்ணக்கூடிய காய்கறி வகை
i. பூசணிக்காய் ii. பாகற்காய் iii. கரட்

41. கிளைத் தண்டுகள் மூலம் புதிய தாவரத்தை உருவாக்கும் தாவர வகையானது
i. கங்குன் ii. பப்பாசி iii. பாகல்

42. மலைநாட்டு பிரதேசங்களில் அதிகம் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தமானது
i. நிலநடுக்கம் ii. மண்சரிவு iii. சுனாமி

43. தூய நீரின் இயல்பல்லாதது
i. நிறமற்றது
ii. மணமற்றது
iii. குறித்த வடிவமுடையது

44. நீராவியை குளிரவைப்பதன் மூலம் தோன்றுவது?
i. நீர் ii. பனிக்கட்டி iii. சுடுநீர்

45. சுய ஒளி அற்றது
i. சந்திரன் ii. சூரியன் iii. நட்சத்திரம்

46. தாவர மகரந்த சேர்க்கைக்கு உதவும் பிராணி அல்லாதது
i. வௌவால் ii. தேனீ iii. கிளி

47. 
படத்தில் காட்டப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம்
i. சிகிரியா
ii. தலதா மாளிகை
iii. ஆயிரங்கால் மண்டபம்


48. வயல் நிலத்தில் பயன்படுகின்ற ஒரு உபகரணம்
i. கரப்பு ii. நுகத்தடி iii. மட்டப்பலகை

49. உணவை பேணிப் பாதுகாக்கும் முறை அல்லாதது
i. பொரித்தல் ii. தேனில் இடல் iii. குளிரூட்டுதல்

50. எமது அரசால் எமக்கு இலவசமாக கிடைக்கும் சேவையானது
i. மின்சாரம் ii. நீர் விநியோகம் iii. கல்வி

51. பின்வருவனவற்றுள் பாலிலிருந்து பெறப்படும் உணவுப் பொருள் அல்லாதது
i. மோர் ii. ஜெலி iii. சீஸ்

52. விரைவாக முளைக்காத வித்து அல்லாதது
i. கடுகு ii. மா iii. பூசணி

53. அருகிலுள்ள படம் உணர்த்துவது

i. முன்னோக்கி செல்லுங்கள்
ii. இப்பக்கம் மேலே
iii. நேராக செல்லுங்கள்

54. இலங்கையில் சனத்தொகை அதிகமான மாவட்டம்
i. கொழும்பு ii. வவுனியா iii. முல்லைத்தீவு

55. பட்டம் ஒன்றினை செய்வதற்கு தேவையான பொருள்
i. துணி ii. கயிறு iii. திசுக்கடதாசி

56. பின்வருவனவற்றுள் வாசனைத் தைலம் தயாரிக்கப் பயன்படும் பூ எது?
i. செம்பருத்தி ii. மல்லிகை iii. தாமரை

57. மிகக்குறைவான பாவனைக் காலத்தினைக் கொண்ட உணவுப்பொருள் யாது?
i. பால்மா ii. ரின்மீன் iii. யோகட்

58. திரவ நிலையிலுள்ள ஒரு உலோகம்
i. பாதரசம் ii. ஈயம் iii. வெள்ளி

59. பாதுகாப்பற்ற இடமொன்றில் வேலை செய்பவர் கட்டாயமாக அணிந்திருக்க வேண்டியது
i. தலைக்கவசம் ii. கழுத்துப்பட்டி iii. கையுறை

60. “நான் சென்ற சுற்றுலா” என்ற தலைப்பில் 5 சொற்களுக்கு குறையாத மூன்று வாக்கியங்கள் எழுதுக. எழுவாய் பயனிலை தொடர்பு சரியானதாக இருக்க வேண்டும்.

## மரபுத் தொடர்கள் - விளக்கங்கள்

★ அகலக் கால் வைத்தல் – அளவுகடந்து போதல்
★ ஆகாயக் கோட்டை – மிதமிஞ்சிய கற்பனை
★ ஆறப்போடல் – பிற்போடல்
★ ஆசைவார்த்தை – ஏமாற்றுப் பேச்சு
★ ஆட்கொள்ளல் – அடிமை கொள்ளல்
★ ஆழம் பார்த்தல் – ஒருவரின் தகுதி பற்றி ஆராய்தல்
★ ஆயிரம்காலத்து பயிர் – நெடுங்காலம் நிலைத்திருத்தல்
★ இரண்டும் கெட்டான் – நன்மை தீமை அறியாதவன்
★ இலைமறை காய் – வெளிப்படாது மறைந்திருத்தல்
★ இட்டுக்கட்டுதல் – இல்லாததை சொல்லுதல்
★ இலவு காத்த கிளி – காத்திருந்து ஏமாறுதல்
★ இரண்டு தோணியில் கால் வைத்தல் – ஒரே நேரங்களில் இரு செயல்களில் ஈடுபடல்
★ ஈவிரக்கம் – கருணை
★ ஈடேறுதல் – உயர்வடைதல்
★ உள்ளங்கை_ நெல்லிக்கனி – வெளிப்படையாக தெரிதல்
★ உதவாக்கரை – பயனற்றவன்
★ உப்பில்லாப் பேச்சு – பயனற்ற பேச்சு
★ உச்சி குளிர்தல் – மிக்க மகிழ்ச்சி அடைதல்
★ உருக்குலைதல் – தன்னிலையிலிருந்து மாறுபடல்
★ உலை வைத்தல் – பிறருக்கு அழிவு வருவித்தல்
★ அடியொற்றுதல் – பின்பற்றுதல்
★ அடிநகர்தல் – இடம்பெயர்தல்
★ அடிபணிதல் – கீழ்ப்படிதல்
★ அடி விளக்குதல் – தன் மரபை புகழ் பெறச் செய்தல்
★ அடியிடுதல் – ஆரம்பித்தல்
★ கண் வைத்தல் – விருப்பம் கொள்ளுதல்
★ கண்வளர்தல்_ –நித்திரை செய்தல்
★ கண்ணெறிதல் – கடைக்கண்ணால் பார்த்தல்
★ கண்கலத்தல் – ஒருவரை ஒருவர் விரும்புதல்
★ கண்மூடுதல் – இறத்தல்
★ கண் திறத்தல் – அறிவுண்டாதல்
★ கழுத்துக் கொடுத்தல் – பிறர் துன்பத்தில் உதவுதல்
★ கழுத்தறுத்தல் – நம்பிக்கை துரோகம் செய்தல்
★ கழுத்திற் கட்டுதல்_ –வலிந்து திணித்தல்
★ கழுத்தைக் கட்டுதல் – விடாமல் நெருக்குதல்
★ காது கொடுத்தல் – அவதானித்தல்
★ காது குத்துதல் – ஏமாற்றுதல்
★ காதில் ஓதுதல் – கோள் சொல்லுதல்
★ காதைக் கடித்தல் – இரகசியம் கூறல்
★ கால் பின்னுதல் – தடைப்படல்
★ கால் பிடித்தல் – காலைப் பற்றிக் கெஞ்சுதல்
★ கால் கொள்ளுதல் – ஆரம்பித்தல்
★ காலைச்சுற்றுதல் – பற்றித் தொடர்தல்
★ காலாறுதல் – ஓய்ந்திருத்தல்
★ கால் ஊன்றுதல் – நிலை பெறுதல்
★ காலில் விழுதல் – மன்னிப்புக் கேட்டல்
★ வயிற்றை கட்டுதல் – செலவைச் சுருக்குதல்
★ வயிற்றிலடித்தல் – சீவனத்தை கெடுத்தல்
★ வயிறு வளர்த்தல் – எவ்வாறோ பிழைத்து கொள்ளுதல்
★ வயிறு கடித்தல் – பசியுண்டாகுதல்
★ வயிறு குளிர்தல் – திருப்தி அடைதல்
★ வயிறு எரிதல் – பொறாமை கொள்ளுதல்
★ வாய் விடுதல் – வெளிப்படையாக கேட்டல்
★ வாய் புலம்பல் – பிதற்றுதல்
★ வாய் திறத்தல் – பேசத்தொடங்குதல்
★ வாய்ப்பூட்டுப் போடுதல் – பேசாது தடுத்தல்
★ வாயில் மண் போடுதல் – கேடு விளைவித்தல்
★ கைகழுவுதல் – முற்றாய் விலகல்
★ கைகூடல் – அனுகூலமாதல்
★ கையிடல் – ஆரம்பித்தல்
★ கைநீட்டுதல் – அடித்தல்
★ கைபிசைதல் – செய்வதறியாது திகைத்தல்
★ கைகொடுத்தல் – உதவி செய்தல்
★ கைமிகுதல் – அளவு கடத்தல்
★ கைகலப்பு – சண்டை
★ கையளித்தல் – ஒப்படைத்தல்
★ செவிகொடுத்தல் – கவனித்துக் கேட்டல்
★ செவிக்கேறுதல் – கேட்பதற்கு இனிமையாக இருத்தல்

## கடந்த வார (04.03.2022) வினாத்தாள் 1 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 3 | 11 | 1 | 21 | 3 | 31 | 2 |
| 02 | 2 | 12 | 1 | 22 | 1 | 32 | 3 |
| 03 | 1 | 13 | 3 | 23 | 2 | 33 | 1 |
| 04 | 1 | 14 | 2 | 24 | 1 | 34 | 2 |
| 05 | 2 | 15 | 3 | 25 | 3 | 35 | 3 |
| 06 | 2 | 16 | 2 | 26 | 2 | 36 | 1 |
| 07 | 3 | 17 | 1 | 27 | 1 | 37 | 1 |
| 08 | 1 | 18 | 3 | 28 | 3 | 38 | 2 |
| 09 | 2 | 19 | 1 | 29 | 1 | 39 | 2 |
| 10 | 3 | 20 | 2 | 30 | 2 | 40 | 1 |

# கிழக்கின் குரல்



# கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பொத்துவிலுக்கு விஜயம்

## பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கேற்பு





**பாலமுனை விசேட நிருபர்**

பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு அம்பியூலன்ஸ் வாகனம் வழங்குதல் மற்றும் வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட உணவு மண்டபம், வாகனத் தரிப்பிடம் ஆகியவற்றை வைபவ ரீதியாக திறந்து வைக்கும் நிகழ்வு புதன் கிழமை (09) இடம்பெற்றது.

பொத்துவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரீ.எஸ்.ஆர்.ரி.ஆர்.ரஜாப் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் எம்.பி.ஏ.வாஜித், திட்டமிடல் பிரிவு வைத்திய அதிகாரி எம்.சீ.எம்.மாஹிர் உள்ளிட்ட பலர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு புதிய அம்பியூலன்ஸ் வாகனம் வழங்கி வைக்கப்பட்டதுடன், உணவு மண்டபம் மற்றும் வாகன தரிப்பிடம் என்பனவும் அதிதிகளினால் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட பிரதம மற்றும் கௌரவ அதிதிகள் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் முஷாரபின் நிதியொதுக்கீட்டின் ஊடாகவே, பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் உணவு மண்டபம், வாகனத் தரிப்பிடம் ஆகியன நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து செங்காமம் பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்ட சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் அப்பகுதியில் பாழடைந்து செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட சுகாதார மத்திய நிலையத்தினையும் பார்வையிட்டனர். பத்து நாட்களுக்குள் குறித்த சுகாதார மத்திய நிலையத்தினை புனரமைத்து மக்கள் பாவனைக்கு கையளிப்பதாக மேற்படி குழுவினர் உறுதியளித்துள்ளனர்.

# காத்தான்குடி பிரதேச செயலகத்தில் கேக் தரப்படுத்தல் கண்காட்சி



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் கேக் தரப்படுத்தல் போட்டியும் கேக் கண்காட்சியும் (08) செவ்வாய்க்கிழமை (08) நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலகத்தினால் ட்ரீம் கேக் நிறுவனத்தின் அனுசரணையுடன் கேக் தரப்படுத்தல் போட்டியும் கேக் கண்காட்சியும் நடைபெற்றது.

இதில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் போட்டியில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இதில் காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதர், உதவி பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ்.சில்மியா, கணக்காளர் செல்வி ஏ.சித்திரா, சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி பத்மா ஜெயராஜ், நிருவாக உத்தியோகத்தர் திருமதி ஜாயிதா ஜலால்தீன், ட்ரீம் கேக் நிறுவனத்தின் ஆசிரியைகள் காத்தான்குடி பிரதேச செயக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது பல்வேறு விதமாக வடிமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட கேக் வகைகள் வைக்கப்பட்டிருந்தன.

# அட்டாளைச்சேனை சந்தை கட்டடத்தை மேம்படுத்தும் வேலை திட்ட நிகழ்வு



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் உள்ளூர் மேம்பாட்டு ஆதரவு திட்டத்தின் கீழ், அட்டாளைச்சேனை சந்தைக்கான கட்டடத்தை மேம்படுத்தும் வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர் ஏ.எல்.அமானுல்லா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வேலைத் திட்டத்தின் பெயர் பலகையினை தீரை நீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.அஹமட் சாபீர், பிரதம பொறியியலாளர் ஏ.எம்.சாஹிர், அட்டாளைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் எம்.எஸ்.எம்.ஜுனைதீன், சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர், பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ், பிரதேச சபை உறுப்பினர்கள்,பிரதேச சபை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் உள்ளூர் மேம்பாட்டு ஆதரவு திட்டத்தின் கீழ், சுமார் 8.5 மில்லியன் ரூபா செலவில் அட்டாளைச்சேனை சந்தைக்கான கட்டிடத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சிநெறி

**பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்**

கெப்சோ நிறுவனம் பிரதேச செயலகங்கள், பாடசாலைகள், மற்றும் கிராம மட்டங்கள் தோறும் பொது மக்கள் அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள், இளைஞர் யுவதிகளுக்கான பல்வேறு திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது.

இதற்கமைவாக அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த மூவின இளைஞர் யுவதிகளுக்கான இரண்டு நாள் பயிற்சிநெறி நிந்தவூர் தோம்பு கண்டத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எம்.அப்துல் லத்தீப், கெப்சோ நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் ஏ.ஜே.காமில் இம்டாட், உட்பட பயிற்சி நெறியின் வளவாளர்களாக எஸ்.சிறீதரன், கே.புவனேந்திரன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

# விவசாயிகளின் விபரங்கள் சேகரிப்பு

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

சம்மாந்துறை சடயந்தலாவ, சவளக்கடை விவசாயக் கண்டங்களில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்டு பாதிப்புற்ற விவசாயிகளின் விபரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன. சடயந்தலாவ விவசாய விரிவாக்கல் திணைக்களத்தின் மூலம் இதற்கான விண்ணப்பங்கள் கமநல அமைப்புகளிடம் வழங்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டு வருவதை காண முடிகிறது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விபரங்களை அறிய அதிகாரிகள் கமநல காப்புறுதிச் சபை உத்தியோகத்தர்கள் வயலை நேரடியாக பார்வையிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் இழப்பீட்டை பெற்ற நிலையில், அம்பாறை மாவட்ட விவசாயிகளும் அதனை விரைவாகப் பெற சமபந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# சிறுபோக விதைப்பு பணிகள் ஏப்ரல் 07 நிறைவு செய்ய வேண்டும்

## ஆரம்ப கூட்டத்தில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர்

**ஒலுவில் விசேட நிருபர்**



அக்கரைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட கல்லோயா வலது கரை நீர்ப்பாசன பிரிவில் சிறுபோக நெற்செய்கைக்கான விதைப்புப் பணிகள் இம்மாதம் 17ம் திகதி ஆரம்பித்து ஏப்ரல் 07ஆம் திகதிக்குள் நிறைவு செய்ய வேண்டுமென, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கைக்கான ஆரம்பக் கூட்டம் புதன்கிழமை (09) அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், இம்முறையும் சேதனப் பசளையை பயன்படுத்தி நெற்செய்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், விவசாயிகளுக்கு தேவையான பரிந்துரைக்கப்பட்ட அளவு சேதன பசளை மற்றும் சேதன திரவம் என்பன மானிய அடிப்படையில் வழங்கப்படுமெனவும் தெரிவித்தார். சேதனப்பசளை மற்றும் சேதன திரவம் என்பன மாவட்டத்திலுள்ள உரக் களஞ்சிய சாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இரசாயன உரம் மற்றும் இரசாயக கிருமிநாசினிகள் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாகவும், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் பிரச்சினை காரணமாக அதற்கான இறக்குமதி கால தாமதமாகுமெனவும் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினிகள் என்பவற்றை கட்டுப்பாட்டு விலைக்கு விவசாயிகளுக்கு வழங்குவதற்கு விவசாய அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்களம் என்பன உர விற்பனையாளர்களிடம் பேச்சுவார்த்தை நடாத்தி அதனூடாக கட்டுப்பாட்டு விலைக்கு இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகள் தாமதிக்காது குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் தமது விதைப்புப் பணிகளை முன்னெடுக்க வேண்டுமென கேட்டுள்ளார்.

அம்பாறை சேனநாயக்கா சமுத்திரத்தில் 03 இலட்சத்தி 50 ஆயிரத்தி 800 ஏக்கர் சதுர அடி நீர் மட்டம் காணப்படுகின்றது. இம்முறை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விவசாய செய்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்றார்.

# ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு



**கல்குடா தினகரன் நிருபர்**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஓட்டமாவடி பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த பெண்களினால் மேற்கொள்ளப்படும் உள்ளூர் தொழில் முயற்சியாளர்களின் கண்காட்சியும், பொருட்கள் விற்பனையும் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (08) இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் வீ.தவராஜாவின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கல்குடா கல்வி வலய உதவி கல்வி பணிப்பாளர் திருமதி எம்.ஏ.றிஸ்மியா பானு, கைத்தொழில் அமைச்சின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் கீர்த்தனா சுதாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.ஹாபீலா, தேசிய தொழில் முயற்சி அதிகார சபை உத்தியோகத்தர் திருமதி எச்.யூ.ஹப்ஸா, ஏற்றுமதி அபிவிருத்தி சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.பி.யூ.ஹபிபா, சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம்.சுகைர் மற்றும் எம்.எப்.சிபானா ஆகியோரின் ஏற்பாட்டில் உள்ளூர் தொழில் முயற்சியாளர்களின் கண்காட்சியும் பொருட்கள் விற்பனையும் இடம் பெற்றது.

இதில் உள்ளூர் தொழில் முயற்சியாளர்களின் சிரட்டையில் தயாரிக்கப்பட்ட பொருட்கள், மரவேலைப்பாடுடனான பொருட்கள், மட்பாண்ட பொருட்கள், தையல் அலங்காரம் போன்ற பொருட்கள் கண்காட்சிப்படுத்தப்பட்டதுடன் விற்பனையும் செய்யப்பட்டது.

# உயர் மட்ட கலந்துரையாடல்

**மாளிகைக்காடு குறூப், பெரியநீலாவணை விசேட நிருபர்கள்**

கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் மையவாடியில் மண் நிரப்பி புனரமைப்பு செய்வது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் புதன்கிழமை (9) திடீர்கள விஜயம் ஒன்றினை மேற்கொண்டு பார்வையிட்டார். இவ் விஜயத்தின் போது கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், கல்முனை முஹைத்தீன் ஜும்மாப் ள்ளிவாசல் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ அஸீஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் மையவாடியினை புனரமைப்பு செய்து முடிப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் தனது நிதி ஒதுக்கீட்டில் இருந்தும், கல்முனை நாகூர் ஆண்டகை தர்கா ஷரீப் கடற்கரைப் பள்ளிவாசல் மற்றும் கல்முனை முஹைதீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நிதியில் இருந்தும் பொதுநல அமைப்புகள் மூலமாக கிடைக்கப்பெறும் நிதிகளின் ஊடாகவும் உடனடியாக மையவாடியினை புனரமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# திருக்கோவிலில் தெய்வீக கிராம நிகழ்வு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருக்கோவில் பிரதேச செயலகம் நடாத்தும் தெய்வீக கிராம நிகழ்வு நாளைமறுதினம் 13 ஆம் திகதி திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தம்பிலுவில் அறநெறி பாடசாலை பதாதை திரை நீக்கம் மற்றும் கலை கலாச்சார பண்பாட்டு நிகழ்வுகளுடன் அறநெறி பாடசாலை மாணவர்களுக்காக வெளியிடப்பட்ட பாடநூல் கண்காட்சியும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இந்து மத இணைப்பாளர் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா அவர்கள் திருமுன்னிலை அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன், நிகழ்வின் தலைமை அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்லஸ் மற்றும் கௌரவ அதிதியாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வாழைச்சேனையைச் சேர்ந்த தேசமான்ய எம்.ஐ.எம் நவாஸ் (ஸலாமி) எழுதிய 'பல்லின சமூகத்தில் இன நல்லிணக்கம்' என்ற நுலை அண்மையில் நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் அவரின் அலுவலகத்தில் வைத்து கையளித்தபோது. அருகில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத் தலைவர் என்.எம். அமீனும் காணப்படுகிறார்.




# நீர்வீழ்ச்சிகளில் ஏற்படும் மரணங்கள் அதிகரிப்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தில் நீர்வீழ்ச்சிகளில் ஏற்படும் மரணங்கள் அதிகரித்துள்ளதாக இரத்தினபுரி மாவட்ட நீர்வீழ்ச்சிகள் பாதுகாப்பு அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

அதிலும் இரத்தினபுரி வழியாக சிவனொளிபாத மலை செல்லும் யாத்திரிகர்கள் களுகங்கை உட்பட பல நீர்நிலைகளில் நீராடுகின்றனர். இதன்போது ஏற்படும் கவனயீனம் காரணமாக உயிராபத்துக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சில வாரங்களுக்கு முன் இரத்தின பலாபலாபத்தல ஊடாக ஓடும் களுகங்கையில் நீராடச் சென்று வெள்ளத்தில் சிக்கி 3 மரணங்கள் ஏற்பட்டிருந்தன. அது மட்டுமின்றி சிவனொளிபாத மலை யாத்திரைக் காலத்தில் மட்டுமன்றி ஏனைய சூழ்நிலைகளிலும் இப்பிரதேச நீர்நிலைகளில் குளிக்கவும் உல்லாசமாகக் கழிக்கவும் வரும் பயணிகள் கவனயீனம் காரணமாக உயிராபத்துகளை எதிர்நோக்கியுள்ளதாக இவ்வமைப்பு சுட்டிக்காட்டுகிறது.

இரத்தினபுரி மாவட்டத்தினூடாக சிவனொளிபாத மலைக்குச் செல்லும் மூன்று வீதிகளிலும் களுகங்கை வளவை கங்கையும் இவற்றின் கிளையாறுகளும் நீர்வீழ்ச்சிகளும் அதிகமாகக்காணப்படுகின்றன.

இப்பிரதேசத்திலும் மத்திய மலை நாட்டின் எல்லை பகுதிகளுக்கும் மழை பெய்வதால் நீர்நிலைகளில் வெள்ளம் ஏற்படுவதுண்டு.

இந்நிலைமையால் நீர்நிலைகளில் அடிக்கடி உயிராபத்துக்கள் ஏற்படுகின்றன.

எனவே நீர்நிலைகளை நாடி வருவோர் இவ்விடங்களில் உள்ள அறிவுறுத்தல்களை வாசித்து அவதானமாக செயற்பட்டால் உயிராபத்துக்களிலிருந்து தவிர்ந்து கொள்ளலாம் எனவும் இவ்வமைப்பு அறிவுறுத்தல் வழங்கி வருகிறது.





கிராமத்துக்கு ஒரு வீடு நாட்டுக்கு எதிர்காலம் எனும் வேலைத்திட்டத்தின் கீழ் உக்குவளை பிரதேச செயலாளர் பிரிவில் தொடங்கல் தென்னை கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீட்டை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன திசாநாயக்க நாடாவை வெட்டி வீட்டை திறந்து வைப்பதை படத்தில் காணலாம்

படம் மாத்தளை சுழற்சி நிருபர்

## குளவிக்கொட்டுக்கு இலக்காகி ஒருவர் பலி

**தலவாக்கலை குறூப் நிருபர்**



லிந்துலை சென்கூம்ஸ் தோட்டத்தில் நேற்று முன்தினம் (9) மாலை குளவிக்கொட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார். சென்கூம்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சவரி அந்தோனி ஜோசப் (வயது 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தனது மனைவியும் மகளும் சென்கூம்ஸ் 7 இலக்க மலையில் விறகு சேகரித்துக்கொண்டிருந்த போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சேகரித்த விறகை சுமந்துவர சென்றபோது அங்கு மரமொன்றிலிருந்த குளவிக் கூடொன்று கலைந்து இவரை கொட்டியுள்ளது. இதனையடுத்து பிரதேசவாசிகளால் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் உயிரிழந்துள்ளார்.

## சுயநல அரசியல் வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைந்து செயற்படவேண்டும்

**உக்குவளை விஷேட நிருபர்**

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் இருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாத்திட சுயநல அரசியல் வேறுபாடுகளை மறந்து சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படக்கூடிய காலம் தற்போது உருவாகியுள்ளதாக மாத்தளை மாநகர சபையின் மாநகர முதல்வர் சந்தனம் பிரகாஷ் தெரிவித்தார்.

மாத்தளை மாநகர சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் நேற்று (10ஆம் திகதி) மாநகர கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் நாட்டில் தற்போது எரிபொருள், மின்சாரம் உட்பட சகலவிதமான அத்தியாவசிய தேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் காணப்படுகின்றது. நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சார தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய வீதி விளக்குகளை இரவு நேரத்தில் எரியவிடுவதை முற்றாக தவிர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க மாத்தளை மாநகர சபை எல்லைக்குட்பட்ட சகல வீதி விளக்குகளையும் இரவு நேரத்தில் செயழிலக்க செய்ய வேண்டும். மாத்தளை மாநகர பிரதான வீதி, ராஜவீதி. கொங்காவலை உட்பட நகரருக்குள் இருக்கும் சில வீதிகள் மாத்திரம் வீதி விளக்குகளை செயற்படுத்திட முடிவு எடுத்துள்ளோம். மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக சில நேரங்கள் மாத்திரம் மெழுகுவர்த்திகளை உபயோகிக்கும்படியும் மாநகர முதல்வர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கொரோனா சவால்களை முறியடித்து நாட்டை ஒரு சரியான பாதையில் கொண்டு செல்ல முற்படும்போது அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு தம்நாட்டை ஆக்கிரமிக்க தொடங்கியுள்ளது. இவற்றுக்கு முகம்கொடுத்து இந்த சவால்களை முறியடித்திட முற்படும் போது ரஷ்ய உக்ரேன் யுத்தம் எமது நாட்டுக்கு பலவிதமான சவால்களையும் ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## பச்சைக் கொழுந்து இன்மையால் தேயிலை தொழிற்சாலைகள் பாதிப்பு

**பலாங்கொடை தினகரன் நிருபர்**



தேயிலை தொழிற்சாலைகளை நடாத்தி செல்ல தேவையான பச்சைக் கொழுந்து இன்மையால் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளதாக தொழிற்சாலை முகாமையாளர் தெரிவித்தனர்.

தேயிலை உற்பத்திக்காக பயன்படுத்தும் இரசாயன உரம் மற்றும் இரசாயன மருந்துகள் இன்மையால் தேயிலைத் தோட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பச்சைக் கொழுந்தும் வீழ்ச்சியடைந்துள்ளது.

தேயிலை உற்பத்தி செய்யவும், தேயிலை தொழிற்சாலைகளை நடாத்திச்செல்லவும் தொழிற்சாலைகளுக்கு நாளாந்தம் தேவைப்படும் பச்சைக் கொழுந்தனின் அளவு இத்தினங்களில் நூற்றுக்கு 30% வீதம் மாத்திரமே கிடைப்பதாக தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

தேயிலை தொழிற்சாலையினை நடாத்திச் செல்ல நாளாந்தம் தேவைப்படும் பச்சைக் கொழுந்தின் அளவு நூற்றுக்கு 70% வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக தொழிற்சாலைகளை நடாத்திச் செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். தேயிலை உற்பத்திற்கு போதுமான அளவு பச்சைக் கொழுந்து கிடைக்காமையினால் பலாங்கொடை பிரதேசத்திலுள்ள தேயிலைத்தொழிற்சாலைகள் பலவற்றில் தேயிலை உற்பத்திகள் ஒருநாள் விட்டு ஒருநாள் மேற்கொள்ள தீர்மானித்துள்ளனர். வலேபொட இராசகலை ஹெரமிடிகல சீதகல வேவல்வத்த சமணலவத்த பின்னவல எல்லேபொல மஸ்ஸன்ன ஊவெல்ல குருபெவில ஆகிய பகுதிகளிலிருந்து கிடைக்கும் பச்சைக் கொழுந்தினைக் கொண்டு இப்பிரதேசத்திலுள்ள தேயிலை தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. தேயிலை தொழிற்சாலைகள் மூடப்பட்டால் அங்கு பணி புரியும் அனைத்து தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுமென முகாமையாளர் தெரிவித்தார்.



கண்டி நகரிலுள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் கோவிலில் அண்மையில் நடைபெற்ற கொடியேற்ற நிகழ்வின் போது பிடிக்கப்பட்ட படம்.

படங்கள் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்



மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள கர்ப்பிணி தாய்மார்களுக்கு சத்துணவு வழங்கும் வைபவம் நேற்று காலை மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி. ஜ. ஈர்ஜாட் தலைமையில் இடம்பெற்றது. பிரதேச சபை தவிசாளர் கோவிந்தன் செம்பகவள்ளியினால் மகளிர் தினத்தை முன்னிட்டு 35 கர்ப்பிணி தாய்மார்களுக்கு 96000/= ரூபாய் மதிப்புள்ள சத்துணவு பொதிகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர்கள், அதன்செயலாளர், மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

## திறன் வகுப்பறைத் திறப்புவிழா




UK ரட்னம் பவுன்டேஷன் மற்றும் வன்னி ஹோப் ஆஸ்திரேலியா நிறுவனத்தின் அனுசரணையுடன் திறன் பலகை வகுப்பறை திறப்புவிழா அண்மையில் கே/தெஹி பூனுகல தமிழ் வித்தியாலயத்தில் மிக பிரம்மாண்டமான முறையில் நடைபெற்றது.

இப்பாடசாலையானது மிகவும் பின்தங்கிய வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி பயிலும் ஒரு பாடசாலை என்பது குறிப்பிடத்தக்கது.

அதிபர் திரு. K ரகுநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொண்டு நிறுவனங்கள், கல்வி அதிகாரிகள், பெற்றோர், ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். இப்பாடசாலை தலைமை ஆசிரியரின் உரையில் நவீன திறன் வகுப்பறைகளை அன்பளிப்புச் செய்தவர்களுக்கு நன்றி பாராட்டி , காலத்திற்கேற்ப சிறந்த தொழில்நுட்ப வசதிகளுடன் இந்த வகுப்பறை விளங்குவதாகவும் இதனூடாக எதிர்காலத்தில் மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்த முடியும் என உறுதி மொழி கூறினார்.

# மலையகத்தில் கடும் வறட்சி குடிநீரை பெற்றுக்கொள்வதில் சிரமம்



### புரவுன்சீக் தோட்ட மக்கள் தெரிவிப்பு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மத்திய மலைநாட்டில் கடந்த சில மாதங்களாக கடும் வறட்சி நிலவுவதால் சுத்தமான குடிநீரை பெற்றுக் கொள்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆர். பி. கே. பிலாண்டேசனுக்கு உரித்தான மஸ்கெலியா புரவுன்சீக் தோட்ட மக்கள் சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்வதில் சொல்லெண்ணா துன்பங்களை எதிர்நோக்கிவருகின்றனர். இப்பகுதியில் சுமார் 250 குடும்பங்கள் உள்ளன.

கடந்த பல தசாப்த காலமாக இவ்வாறு வறட்சியான காலத்தில் குடிநீர் இல்லாமல் மக்கள் அவதிப்படுகின்றனர். வறட்சியான காலத்தில் இடைக்கிடை நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் குடிநீர் வழங்கப்படுகின்றது. எனினும் தற்போது அந்த இயந்திரம் பழுது அடைந்து வரும் நிலையுள்ளது. சுமார் 50 ஆண்டு காலம் உபயோகிக்கும் அந்த பழமையான இயந்திர ஊடாக நீரை வழங்குகின்றனர் இருந்த போதும் மாதத்தில் பல நாட்கள் இந்த இயந்திரம் பழுது அடைந்து விடுவதால், தோட்ட மக்கள் பாதிக்கப்பட்டு வருவதாக புகார் தெவிக்கின்றனர்.

குடிநீர் தட்டுப்பாட்டால் அத் தோட்ட தொழிலாளர்கள் தங்களின் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பவும், பணிக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தோட்ட அதிகாரிகள் முன் வந்து சுத்தமான குடிநீரை பெற்று கொடுக்க ஆவண செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். தற்போது பவுசர் மூலம் வழங்கப்படும் நீர் சுத்திகரிப்பு செய்யாமல் வழங்கப்படுவதால் பல நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என தோட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர்.




தினகரன்

வடக்கின் உதயம்

Vadakkin Uthayam

2022 மார்ச் 11
வெள்ளிக்கிழமை


# டீசல் இன்மையால் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு இடையூறு

**பரந்தன் குறூப் நிருபர்**



முல்லைத்தீவு மணலாறு பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை தடையின்றி முன்னெடுத்துச்செல்வதற்கு டீசலினை பெற்றுத்தருமாறு மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல் சர்வதேச தொண்டர் நிறுவனத்தினர் நேற்று முன்தினம் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை காரணமாக பல்வேறு செயற்பாடுகள் முடங்கி போயுள்ளதுடன் பொதுமக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் எரிபொருளை பெற்றுக் கொள்வதில் பல்வேறு நெருக்கடிகள் காணப்படுகின்றன. இந்நிலையில் மணலாறு பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணிகள் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக பின்னடைவை சந்தித்துள்ளன.

பணியாளர்களை ஏற்றி இறக்குவது மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு எரிபொருள் பற்றாக்குறை காரணமாக நெருக்கடி நிலை காணப்படுவதாக அந்நிறுவனத்தின் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்கு தடையின்றி பணிகளை முன்னெடுக்கக் கூடிய வகையில் எரிபொருளை பெற்றுத்தருமாறு மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்கு பதிலளித்த மாவட்ட அரசாங்க அதிபர் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு இது தொடர்பில் தெரியப்படுத்தி நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

# கிளிநொச்சிக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

## மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு மீளாய்வு கூட்டத்திலும் பங்கேற்பு




**பரந்தன் குறூப் நிருபர்**


கிளிநொச்சி மாவட்டத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தார்.

நேற்றைய (10.03.2022) தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு மீளாய்வு கூட்டத்தில் மாவட்டத்தில் இவ்வாண்டு முன்னெடுக்கப்படும் அபிவிருத்திகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

நேற்று பகல் 11 மணிக்கு நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கரைச்சி கண்டாவளை பச்சிலைப்பள்ளி பூநகரி பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள் மற்றும் துறைசார் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் மந்திரி மனை ஜன்னல், கம்பிகள் திருட்டு





**யாழ். விசேட நிருபர்**

வரலாற்று தொன்மை வாய்ந்த நல்லூர் மந்திரி மனை யன்னல் மற்றும் ஜன்னல் கம்பிகள் என்பன களவாடப்பட்டுள்ளன.

மந்திரி மனையின் பின் பக்கமாக காணப்பட்ட ஜன்னல்களின் கம்பிகள் மற்றும் யன்னல் என்பவை பெயர்த்தெடுக்கப்பட்டு திருடப்பட்டுள்ளன. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மந்திரி மனை என்பது யாழ்ப்பாண மாவட்டத்தின் தலைநகராக இருந்த நல்லூர் அரசதானி காலத்தோடு தொடர்புபடும் ஒரு கட்டடமாகும்.

போர்த்துக்கேயரால் யாழ்பாண அரசு கைப்பற்றப்படுவதற்கு முன்னுள்ள காலப்பகுதி வரை அமைச்சரின் இருப்பிடமாக இருந்துள்ளது.

இது 13 நூற்றாண்டுக்கு முற்பட்டது. இக்கட்டடம் செங்கட்டி சுண்ணாம்பு சாந்து மரங்கள் ஓடுகள் கொண்டு கட்டப்பட்டுள்ளது.

# யாழில் திராட்சைப் பயிர்ச்செய்கை அறுவடை விழா

**சாவகச்சேரி விசேட நிருபர்**





மழைக்காப்புக் கூடாரத்தின் கீழான திராட்சைப் பயிர்ச்செய்கை அறுவடை விழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் இளவாலை முள்ளானைக் கிராமத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையமும் யாழ் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிமனையும் இணைந்து முன்னெடுத்த அறுவடை விழாவில்,

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பிரத்தியேக செயலாளரும், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் வடமாகாண இணைப்பாளருமான குலேந்திரன் சிவராம் மற்றும் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு அறுவடை விழாவினை ஆரம்பித்தனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த அங்கஜன் இராமநாதன் எம்.பியின் செயலாளர் சிவராம் கருத்துத் தெரிவிக்கையில்;

அங்கஜன் இராமநாதன் விவசாய பிரதி அமைச்சராக இருந்த காலத்தில் இலங்கையின் திராட்சைப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக யாழ். மாவட்டத்தை திராட்சைப் பயிர்ச்செய்கை உற்பத்தி வலயமாக தெரிவு செய்திருந்தார்.

அதனடிப்படையில் கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தால் புதிய இன திராட்சைப் பயிர்கள் அறிமுகம் செய்யப்பட்டு தற்போது அந்த புதிய வர்க்கங்கள் அதிக விளைச்சலைத் தருகின்றன.

இலங்கையில் திராட்சைப் பயிர்ச்செய்கை வெற்றிகரமாக இடம்பெறும் ஒரே மாவட்டமாக யாழ் மாவட்டம் விளங்குகின்றது.

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் திராட்சைகளை மட்டுப்படுத்தும் பட்சத்தில் உள்ளூர் திராட்சைப் பழங்களுக்கு சிறந்த சந்தை வாய்ப்புக் கிடைக்கும்.

எனவே திராட்சை செய்கைக்குரிய மண் வளத்தைக் கொண்ட விவசாயிகள் திராட்சை பயிர்செய்கையை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நிதியுதவி

**கோப்பாய் குறூப் நிருபர்**



யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 50 இலட்சம் ரூபா பணம் கனடா நாட்டு புலம்பெயர்ந்த குடும்பம் ஒன்றினால் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

அண்மையில் உயிரிழந்த சீலா சுகுமார் ஞாபகார்த்தமாக இந்த உதவிப்பணம் அவரது குடும்பத்தினரால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் கனடா வைத்தியசாலையொன்றுக்கும் வழங்கப்படுவதாக அவரின் நண்பரும் கனடா இலங்கை வர்த்தக சங்கத்தின் தலைவருமான குலா செல்லத்துரை தெரிவித்தார்.

சீலா சுகுமார் இறப்பதற்கு முதல் தெரிவித்த விருப்பத்திற்கமைய இந்த உதவிகள் வழங்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.



இராணுவத்தில் பணியாற்றிய நிலையில் உடல்நலகுறைவு காரணமாக உயிரிழந்த யாழ். அச்சுவேலியைச் சேர்ந்த தமிழ் இராணுவ வீரரின் இறுதிசடங்குகள் கடந்த மார்ச் 4 ஆம் திகதி அச்சுவேலி இந்து மயானத்தில் இடம்பெற்றது. இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் வழிகாட்டலின் கீழ், யாழ் பாதுகாப்புப் படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத் யாபா சிரேஷ்ட அதிகாரியாக இறுதி கிரியைகளில் கலந்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர்களின் வளமான எதிர்காலத்தை உறுதிப்படுத்த ஈ.பிடி.பி துணையாக இருக்கும்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பிரதேச நிர்வாகப் பொறுப்பாளர் அம்பலம் இரவிந்திரதாசன் சிறார்களின் வளமான எதிர்காலத்தை உறுதிப்படுத்திக்கொள்ள எம்மாலான உதவிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக என்றும் மேற்கொண்டு தருவேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பிரதேச நிர்வாகப் பொறுப்பாளர் அம்பலம் இரவிந்திரதாசன் தெரிவித்துள்ளார்.



கொக்குவில் மேற்கு கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வுகள் நேற்றையதினம் நடைபெற்றன.

இதில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

நாடு தற்போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றது. ஆனாலும் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் குறிப்பாக மாணவர்களின் பாதுகாப்பில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. இதற்காக பல விசேட திட்டங்களையும் செய்து இன்று கற்றல் நடவடிக்கைகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேநேரம் இந்த முன்பள்ளி மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை நவீன மயப்படுத்த இந்த அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றது. குறிப்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எமது பிரதேச முன்பள்ளிகளின் நலன்களில் அதிக அக்கறை செலுத்தி வருகின்றர்.

இதனால்தான் தற்போதும் அவர் தனது நிதி ஒதுக்கீட்டில் முன்பள்ளிக்கும் ஒதுக்கிடு செய்து சிறார்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு உரமூட்டியுள்ளார். அந்தவகையில் எமது இந்த முன்பள்ளி சிறார்களின் மேம்பாட்டுக்கு நாம் என்றும் துணையாக இருப்பதுடன் அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதில் பின்வாங்கப் போவதில்லை என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாட்டுவண்டியில் மாதாந்த அமர்விற்குச் சென்ற பிரதேசசபை உறுப்பினர்கள்



எரிபொருள் பற்றாக்குறையை கண்டித்து முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்கள் மாதாந்த சபை அமர்வுக்கு மாட்டுவண்டியில் சென்றனர்.

முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலய முன்றலிலிருந்து இவ்வாறு சபை உறுப்பினர்கள் மூன்று மாட்டுவண்டிகளில் சபை அமர்வுக்கு புறப்பட்டிருந்தனர்.

குறிப்பாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கரைதுறைப்பற்று பிரதேசசபைத் தவிசாளர் க.விஜிந்தன், உபதவிசாளர் ம.தொம்மைப்பிள்ளை, உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், தி.இரவீந்திரன், இ.கவாஸ்கர், க.தவராசா, இ.கஜீதரன், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி உறுப்பினரான இ.ஜெகதீசன், தமிழர் விடுதலைக்கூட்டனியின் உறுப்பினர்களான த.அமலன், மோ.விக்கினா ஆகியோர் இவ்வாறு மாட்டுவண்டிகளில் சபை அமர்விற்குச்சென்றிருந்தனர்.

# ஐந்து வருடங்களாக தொடரும் போராட்டம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கவலை

**ஓமந்தை விஷேட நிருபர்**




எமது பிரச்சினையில் சர்வதேசமே தலையிட வேண்டும் என வவுனியாவில் ஐந்து வருடங்களாக தமது போராட்டம் தொடர்ந்துவருவதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

எமக்கு தீர்வு கிடைக்க வேண்டுமாக இருந்தால் வெளிநாடுகளின் தலையீடு அவசியம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நேரடியாக வந்து இப்பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தொடர் போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றோம்.

இன்று எமது போராட்டத்தை வெளிநாடுகள் உன்னிப்பாக அவதானித்து கொண்டு இருக்கின்றனர். நாங்கள் வெளிநாட்டின் தலையீட்டினையே நம்பி இங்கிருந்து போராடி வருகின்றோம்.

# இலங்கை பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

## அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவிற்கமைய, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") நுகர்வோருக்கு தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தைக் கிடைக்கச் செய்வதை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு பின்வரும் தரப்புக்கு மின்சாரத்தினை பிறப்பாக்கம் செய்யும் நோக்கத்திற்கான அனுமதிப் பத்திரத்தினை வழங்க உத்தேசிக்கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றது.

| விண்ணப்ப குறிப்பு இல. | விண்ணப்பதாரர் | மின் நிலையம்/ வசதியின் பெயர் | திறன் (MW) | தொழினுட்பம் |
|---|---|---|---|---|
| E/AL/N/22/10 | கூல்பவன் ஹைட்ரோ (பிரைவேட்) லிமிடெட் | கூல்பவன் மினி ஹைட்ரோ மின் உற்பத்தி நிலையம் | 0.75 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/22/11 | மார்க் மெரின் சர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட் | கரோலினா 1 மினி ஹைட்ரோ மின் உற்பத்தி நிலையம் | 2.5 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/22/03 | பவர்பேஸ் டெக்னொலஜி (பிரைவேட்) லிமிடெட் | வீ ஓயா மினி மின் உற்பத்தி நிலையம் | 6 | மினி ஹைட்ரோ |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும் போது விண்ணப்பக் குறிப்பு இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

திகதி: 2022.03.11

# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 மார்ச் 15ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 60,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122F174 | LKA18222I167 | LKA36423C170 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 20,000 | 20,000 | 20,000 | 60,000 |

ஏல விற்பனைத் திகதி : 2022 மார்ச் 15
தீர்ப்பனவுத் திகதி : 2022 மார்ச் 18
வழங்கப்படும் திகதி : 2022 மார்ச் 18
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 மார்ச் 15, செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

எம். இசட். எம். ஆசிம்
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்

*வழங்கும் அலுவலகம்:*
பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk

# அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

களனி, தேவால வீதி, 667/16ஏ இல் வசிக்கும் தம்மிக்கா மல்லவாரச்சி ஆகிய நான், இலக்கம் 1509 இன் கீழ் பக்க இலக்கம் 16424 அதிகாரப் புத்தகத்தின் 288 இன் கீழ் 2019.09.25 அன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும் சத்தியப்பிரமாண ஆணையாளருமான திரு. டப்ளியு.எம். கிரிஷாந்த பண்டார என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 01630 மற்றும் 2019.09.26 திகதிய அற்றோணி தத்துவத்தின் பிரகாரம், காலி, கந்தவத்த, பன்சல ஒழுங்கை ஈ.ஏ. பவுலஸ் மாவத்தை, இலக்கம் 46 இல் வசிக்கும் கெலிஸ்டஸ் ரோஹித டயஸ் குணவர்தன என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி தத்துவமானது இன்று முதல் செயல்வலுப்பெறும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**தம்மிகா மல்லவாரச்சி**




# தேசிய கல்வி நிறுவகம் - மஹரகம

## பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி – 2022 / 2023

**தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**பாடநெறியின் காலம்** : பன்னிரண்டு மாதங்கள்
நிகழ்நிலை ஊடான இரு தவணைகளை (Semester) கொண்ட கல்விசார் செயலொழுங்குகள் நடைபெறும்.

**பாடநெறி நடைபெறும் இடம்** : தொழில்வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவத் துறை, கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம், தேசிய கல்வி நிறுவகம், மீப்பே சந்தி, பாதுக்க

**பாடநெறியின் மொழி மூலம்** : சிங்களம் / தமிழ்

**கட்டண விபரங்கள்**

விண்ணப்பக் கட்டணம் : ரூபா 1,500/-
பதிவுக் கட்டணம் : ரூபா 1,000/-
பாடநெறிக் கட்டணம் : ரூபா 50,000/- (சமமான இரண்டு தவணைகளில் கட்டணத்தைச் செலுத்த முடியும்)

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய வழிமுறை**

தேசிய கல்வி நிறுவகத்தின் பரீட்சைகள் துறையின் இணையதளத்தில் (https://www.exams.nie.lk/intakes/new) பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுதல் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் இணையதளத்தில் Diploma in School Management பாடநெறிக்குரிய Advertisement ஐ தெரிவு செய்து அதில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தவும்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 10.04.2022**

**கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன**
**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**

# பெறுகை அறிவித்தல்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

(ஒரு-உறை விலைமனுக்கோரல் செயற்பாடு)

**நாடு** : இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
**செயற்றிட்டப் பெயர்** : **Sri Lanka COVID-19 Emergency Response and Health Systems Preparedness Project, Ministry of Health.**
**ஒப்பந்த தலைப்பு** : **Proposed Modification and Upgrading of Old District General Hospital Hambantota to an Infectious Disease Hospital.**
**கடன் இலக்கம்** : **6595-LK**
**RFB Reference No.** : **LK-MOH-224660-CW-RFB**

1. Sri Lanka COVID-19 Emergency Response and Health Systems Preparedness Project இன் ஆகுசெலவிற்காக உலக வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது நிதியிடலைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை ஹம்பந்தொட்டவிலுள்ள பழைய மாவட்ட பொது வைத்தியசாலையின் உத்தேசிக்கப்பட்ட மாற்றங்கள் மற்றும் மேம்படுத்தலின் பின் தொற்று நோய் வைத்தியசாலையாக மாற்றியமைப்பதன் ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இலங்கை கொவிட்-19 அவசர சேவை மற்றும் சுகாதார முறைமைகள் தயார்நிலை செயற்றிட்டத்தின் சார்பாக செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இடைநிகழ்வுகள் அடங்கலாக பெசேவ உடன் 199,285,000 இலங்கை ரூபா ஆகுசெலவில் மதிப்பிடப்பட்டுள்ள ஹம்பந்தொட்ட பழைய மாவட்ட பொது வைத்தியசாலையை மாற்றங்கள் மற்றும் மேம்படுத்தலின் பின்னர் தொற்று நோய் வைத்தியசாலையாக மாற்றியமைப்பதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

   இவ்வேலையானது குறைபாடுகள் அறிவித்தல் அடங்கலாக அளவைப் பட்டியல் மற்றும் வரைபடங்களில் விபரிக்கப்பட்டவாறு ஹம்பந்தொட்ட பழைய வைத்தியசாலையை தொற்று நோய் வைத்தியசாலையாக மாற்றுவதிலுள்ள மாற்றங்கள் மற்றும் மேம்படுத்தல் வேலைகளை அடக்குகின்றது.

   நிர்மாணக் காலப்பகுதியானது 180 நாட்களாகும்.
3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையை விலைமனுக்களுக்காக பாவித்து 2020 நவம்பர் 4 ஆம் பதிப்பின் ''IPF இன் கடன்பெறுநர்களுக்கான'' உலக வங்கியில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள கோரிக்கையொன்றை பாவித்து நடாத்தப்படுமென்பதுடன் பெறுகை ஒழுங்குவிதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு அனைத்து தகுதியுள்ள விலைமனுதாரர்களும் பங்கு பெறலாம்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கட்டிட நிர்மாணத்தில் சி-3 தரத்தில் பதிவு பெற்றவர்களாகவும் நிபுணத்துவத்தையுடையவர்களாகவுமிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை இலங்கை கொவிட்-19 அவசர சேவை மற்றும் சுகாதார முறைமைகள் தயார்நிலை செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்று 2022 மார்ச் 11 ஆம் திகதியிலிருந்து 2022 ஏப்ரல் 1 ஆம் திகதி வரையும் பொது விடுமுறைகள் நீங்கலாக திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையும் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
6. 2022 மார்ச் 11 ஆம் திகதியிலிருந்து 2022 ஏப்ரல் 1 ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 30,000 இலங்கை ரூபாவை செலுத்திய பின்னர், கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் செயற்றிட்ட பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்கள் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவானது இலங்கை வங்கி தப்ரோபேன் கிளையிலுள்ள 7040244 என்ற சுகாதார சேவைகள் பணப்பாளர் நாயகத்தின் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படலாமென்பதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தை கையேற்கும் போது அந்த பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 2022 ஏப்ரல் 4 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் விலைமனுதாரர்களின் குறிப்பிடப்பட்ட பிரதிநிதிகளின் முன்னால் பகிரங்கமாக திறக்கப்படுவதுடன் வேறுயாராவது நபர்களும் கீழேயுள்ள முகவரியில் சமுகமளிக்கலாம்.
8. அனைத்து விலைமனுக்களும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கமைவான விலைமனு பிணையமொன்றுடன் (2,000,000 இலங்கை ரூபா) இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. ஹம்பந்தொட்ட பழைய மாவட்ட பொது வைத்தியசாலையில் 2022 மார்ச் 16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் ஒழுங்கு செய்யப்படும்.
10. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**இலங்கை கொவிட்-19 அவசர சேவை மற்றும் சுகாதார முறைமைகள் தயார்நிலை செயற்றிட்டம்,**
**4 ஆம் மாடி, ஜே.ஆர். ஜயவர்தன நிலையம்,**
**191, தர்மபால மாவத்தை, கொழும்பு-07, இலங்கை.**
**தொலைபேசி : +94 112 674 797**
**மின்னஞ்சல் : tender.covid19 erhsp@gmail.com**
**தொலைநகல் : +94 112 674 342**

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**இலங்கை கொவிட்-19 அவசர சேவை மற்றும் சுகாதார முறைமைகள் தயார்நிலை செயற்றிட்டம்,**
**4 ஆம் மாடி, ஜே.ஆர். ஜயவர்தன நிலையம்,**
**191, தர்மபால மாவத்தை, கொழும்பு-07, இலங்கை.**
திகதி: 2022 மார்ச் 11 ஆம் திகதியன்று.

# கடற்றொழில் அமைச்சு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)

NAQDA

## விலைமனுக்கோரல்
## பெறுகை அறிவித்தல்

01. இலங்கையின் தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை (NAQDA) என்பது நிர் வளம் மற்றும் நீர் உயிரினவளர்ப்பு தொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ வளர்ச்சிக்காக 1998 ஆண்டு இல 53 ஆம் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

    இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் (மேஜர்) தேசிய போட்டி ஏல நடைமுறையை பின்பற்றி ஒரு வருட காலத்திற்கு பின்வரும் சேவையை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் மற்றும் பெயர் | மனுப் பாதுகாப்பு தொகை (SLR) மற்றும் செல்லுபடியாகும் காலம் | மீளச் செலுத்தப்படாத கட்டண பெறுமதி (SLR) | மனு ஆவணங்கள் வழங்கப்படும் மற்றும் இறுதி திகதி / நேரம் | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி / நேரம் |
|---|---|---|---|---|
| **Artemia (Brine Shrimp) NQ/DPC/2022/NCB/G/02** கொள்முதல் மற்றும் விநியோகம் **தேவை - சுமார் 2,247 கேன்கள், 450g** | **300,000.00 121 நாட்கள் 30.07.2022) வரை** | **5,000.00** | **30. 03. 2022 பி.ப.3.00** | **31. 03. 2022 பி.ப.2.00** |
| **Raw materials for fish Feed** மீன் உணவு மீன் உணவு கொள்முதல் **NQ/DPC/2022/NCB/G/03** | மனு பாதுகாப்பு தொகை மனு ஆவணத்தில் ITB பிரிவு 20.2 பிரிவு II - மனு தரவுதாள் (BDS) கீழ் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது | **5,000.00** | **30. 03. 2022 பி.ப. 3.00** | **31. 03. 2022 பி.ப. 2.00** |
| **Soya Beans** சோயா விதைகள் கொள்முதல் **NQ/DPC/2022/NCB/G/04** **தேவை - 20,000 kg** | **100,000.00 121 நாட்கள் (23.07.2022) வரை** | **2,000.00** | **23. 03. 2022 பி.ப. 3.00** | **24. 03. 2022 பி.ப. 2.00** |

02. மேலதிக தகவல்களை (071 772 4430 / 011 278 6544, 6495, தொலைநகல் : 011 278 6493, 6575 மின்னஞ்சல் : **po@naqda.gov.lk** மற்றும் **www.naqda.gov.lk**) மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு (மைனர்)
இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை,
இல 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல.
2022.03.11

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WP AAC-1596 Bajaj, 2012, threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711 2 10 810. 018296

WP BIF-9675 Honda CB160, 2018, motor cycle கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810. 018294

## வேலைவாய்ப்பு

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

கொழும்பு 05, ஹெவ்லொக் வீதியில் இல் ஓர் சீன உணவகத்தில் வெற்றிடங்கள். பயிலுநர்/ பயிற்சி பெற்ற வெயிட்டர்கள், கிச்சன் ஹெல்பர், டிஷ் வொஷர்ஸ் மற்றும் வெயிட்டர்/ ரைடர்கள். தொடர்பு 0705323273, 0765718240. 016126

### 322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

மேசன் பாஸ்மார் தேவை. அழைக்கவும். 07 7 7724178. T.Pratheep. 017835

## SC/FR/95/2020 என்ற இலக்கமுடைய உயர் நீதிமன்ற அடிப்படை உரிமை விண்ணப்பம் தொடர்பாக வழங்கப்படும் அறிவித்தல்

2020.02.19ஆம் திகதியிடப்பட்ட **RTM** இல. 936 **(CRTM1247)** இற்கு அமைவாக இலங்கை பொலிஸின் பதவி ஏற்றம் பெற்ற பெண் பொலிஸ் சார்ஜண்ட் அல்லது பொலிஸ் சார்ஜண்ட் இற்கானது

அரசியலமைப்பின் 126(2) உறுப்புரையின் கீழும் பிரகாரமும் மனுதாரர்களுக்கு அவர்களின் விண்ணப்பத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக அனுமதியை உயர் நீதிமன்றமானது வழங்கியுள்ளதென கவனத்திற் கொள்ளவும்.

விண்ணப்பமானது 2022.03.29ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-12, ஹல்ஸ்டோப்பிலுள்ள உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மேற்கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் விண்ணப்பத்திற்கு P-2 என அடையாளமிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதாவது C.D. விக்கிரமரத்ன பொலிஸ்மா அதிபருக்கெதிராக உயர் நீதிமன்றத்தில் முடிவின்றி இருக்கும் மேலேயுள்ள பாங்கு மற்றும் இலக்கமுள்ள அடிப்படை உரிமைகள் விண்ணப்பமானது 1ஆம் எதிர்வாதியினால் 2020.02.19 ஆம் திகதியிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளதான மேலேயுள்ள RTM இலக்கமான 636 (CRTM 1247) இல் அமைந்துள்ள நியமனங்களை மனுதாரர்கள் ஆட்சேபனை தெரிவித்த மேலேயுள்ள இலக்கமிட்ட விண்ணப்பம் தொடர்பாக அறிவித்தல் வழங்கும்படி மனுதாரர்களுக்கு நீதிமன்றம் மேலும் உத்தரவு இடப்பட்டுள்ளது.

கொழும்பு - 12, ஹல்ஸ்டோப்பிலுள்ள இலங்கை உயர் நீதிமன்றத்தில் 2022.03.29 ஆம் திகதியன்று இந்த விண்ணப்பமானது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென கருத்தில் கொள்ளவும்.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## இலங்கை துறைமுக அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/21/PT/17/053 | 1500 Mtrs. of Cloth Drill for Year 2022 | 15,000.00 | 1,000.00 | 30-03-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/04/055 | Trouser Black, Blue, & White – 1700 Nos. | 30,000.00 | 1,000.00 | 30-03-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 மார்ச் 11ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை அதிவேக நெடுஞ்சாலை வருமானத்தினால் நிதியிடப்படுகிறது

### தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

### ஒரு வருட காலத்திற்கு அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவிற்கு பராமரிப்பு வாகனங்களை வாடகைக்கமர்த்துதல் (2022/2023)

1. மேற்குறிப்பிடப்பட்ட விடயத்திற்காக தகுதி மற்றும் தகைமைகளை முழுமையாக பூர்த்தி செய்துள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) சார்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். இங்கு க்றூ கெப்கள் மற்றும் நீர் பவுசர்கள் என இரு ஒப்பந்தங்கள் உள்ளன என்பதுடன் விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது இரண்டிற்கும் தனித்தனியாக விலைக்கோரலாம். முழுமையான விபரங்கள் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளன. சகல விலைமனுக்களுடனும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள பெறுமதிக்கான விலைக்கோரல் பிணைமுறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பராமரிப்பு வாகனங்கள் (Wet குத்தகை அடிப்படையில்)**

| இல. | வாகனத்தின் வகை | ஒப்பந்த இலக்கம் | எண்ணிக்கை | ஒரு மாதத்திற்கான தூரம்/ கி.மீ. | விலைக்கோரல் பிணை முறி ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | க்றூ கெப் | RDA/EOM&M/PRC/2022/MNT/01 | 02 | 2500 | 10,000.00 |
| 02 | நீர் பவுசர்கள் | RDA/EOM&M/PRC/2022/MNT/05 | 02 | 1500 மற்றும் 2500 | 30,000.00 |

2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு, பெறுகை பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி: 038-2289122 தொலைநகல்: 038-2289560) என்பதுடன் விலைமனு ஆவணங்களை அலுவலக நேரங்களில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022-03-11ஆம் திகதியிலிருந்து 2022-03-31ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000.00 ரூபா + **80.00** (பெசேவ) ரூபாவைச் செலுத்திய பின்னர், பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு (EMO&M) பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம்.
4. விலைமனுக்களை 2022.04.01ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைக்கோரலில் கலந்து கொள்ள தெரிவுசெய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
5. விலைமனுக்கள் 2022-07-01ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனுப் பிணைமுறி 2022-07-29ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை பெறுகைக் குழு,**
**மே.ஃபா பணிப்பாளர் (EMO & M) பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம.**

## இலங்கை துறைமுக அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/PT/20/051 | 80 Nos. Fork Lift Tyres 700 X 12 | 68,000.00 | 1,000.00 | 31-03-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 மார்ச் 11ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்கோரல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக களுத்துறை மாகாணத்தின் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளற்ற) ரூ. மில்லியன்) | மனு காப்புறுதிப் பிணைத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| 01. | RDA/DC/WP/IR-GOSL/2022/01 | எத்துல்கோட்டை அங்கம்பிட்டிய வீதி மற்றும் நாவல இராஜகிரிய பாடசாலை வீதியை இணைக்கும் இராஜகிரிய நாவல கால்வாய்க்கு குறுக்காக பதிய பாலத்தில் அணுகு வீதி கட்டுமானம் | 337 | 4.5 | 105 |

02. இக்கட்டுமானத்தில் நடைபாதையினை உயர்த்துதல் மற்றும் தற்செயலான பணிகள் உட்பட அஸ்போல்ட் தார் இடுதல் போன்ற பணிகள் உள்ளடங்கும்.

03. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

04. ஒப்பந்தத்திற்கு தகுதியுடையவர்களாவதற்கு மனுதாரர்கள் கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) தரத்தில் C1 **அல்லது** C2 **தரத்தில் நெடுஞ்சாலைகள் துறையில்** நிபுணத்துவத்திற்கு ஏற்ப பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

05. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளக்கூடியதுடன், மனு ஆவணங்களை **www.rda.gov.lk** எனும் இணையத்தளத்திலிருந்து **2021.03.11** ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ளலாம்.

- பணிப்பாளர் (கட்டுமானம்), வீதி அபிவிருத்தி அதிகார சபை, மூன்றாம் மாடி, "மகநெகும மஹமெதுர" டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.

தொலைபேசி : 011-2864388 மற்றும் பெக்ஸ் : 011-2861821

06. மனு தொடர்பான கூட்டம் **2022.03.21** ஆம் திகதி **மு.ப.11.00** மணிக்கு பணிப்பாளர் (கட்டுமானம்), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தொலைபேசி : 011-2864388 மற்றும் பெக்ஸ் : 011-2861821 Zoom தொழிநுட்பத்தினூடாக இடம்பெறும். தேவையேற்படின் உடனடியாக வேலைத்தளப் பரீட்சிப்பும் ஏற்பாடு செய்துத் தரப்படும்.

முன்மனுக் கூட்டத்திற்கான Zoom தள இணைப்பு :

https://us04web.zoom.us/j/76860515386?pwd= kPfPui1g6AEIBr99162yXOoXkVUU.1

முன் மனுக்கூட்டத்திற்கான ID : **768 6051 5386**

இரகசிய குறியீடு : **R8ka4G**

07. ஒப்பந்தத்திற்கான எழுத்துபூர்வமான விண்ணப்பம் மற்றும் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை செலுத்திய வெல்லுபடியாகும் இரசீது **(ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயர் என்பன ரசீதில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்). மின்னஞ்சல்** மூலமாக பணிப்பாளர் (கட்டுமானம்) வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் **2022.03.11** ஆம் திகதியிலிருந்து **2022.03.31** ஆம் திகதி வரை **09.00 மணியிலிருந்து 15.00 மணி** வரையான காலப்பகுதியினுள் அனுப்புவதன் மூலமாக ஆர்வமுள்ள மனுதாரர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

மின்னஞ்சல் முகவரி : **construction.rda@gmail.com**.

மீளச்செலுத்தப்படாத **ரூபா.37,800/-** (வட்வரிகளுக்கு உட்பட்ட) கட்டணத்தை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

**அ. கணக்கின் பெயர்** : **பணிப்பாளர் நாயகம் - RDA**
**ஆ. கணக்கு இலக்கம்** : **0000001943**
**இ. வங்கி** : **இலங்கை வங்கி - கூட்டுறவு கிளை**

மனுக்களை சமர்ப்பிக்கும்போது அசல் / செல்லுபடியாகும் பண வைப்பு சீட்டுடன் சமர்ப்பித்து மனுக்களை பரிசிலனை செய்துக்கொள்ள முடியும். அசல் / செல்லுபடியாகும் பண வைப்பு சீட்டு இல்லாத மனுக்கள் நிராகரிக்கப்படும்.

1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மனுதாரர்கள் மட்டும் நிறுவன பதிவாளர் திணைக்களத்தில் குறித்த மனுவுக்கு பதிவு செய்யப்படல் வேண்டும்.

08. அனைத்து மனுக்களும், **2022.08.26** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் காப்புறுதிப்பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

09. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் **2022.04.01** ஆம் திகதி **13.00** மணித்தியாலங்களுக்கு முன் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, பணிப்பாளர், வழங்கல் குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, **முதலாம் ஆம் மாடி, "மகநெகும மஹமெதுர" டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை** எனும் முகவரியில் கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

10. மனுக்கள் **2022.07.29** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**
**முதலாம் மாடி, 'மகநெகும மஹமெதுர', டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**

### மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு

### வளர்ச்சி பெறும் பிராந்தியங்களில் JICA நிதியிடப்பட்ட கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டம்

**(கடன் இலக்கம்: SL-P 116)**

# செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை, ஊவா மாகாணம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு – படிநிலை II

**திகதி: 11-03-2022**
கடன் ஒப்பந்த இலக்கம்: **SL-P 116**
**IFB No: SL -P116/ UP2/RR/2021/20**
**IFB No: SL- P116/UP2/AW/2020/05**
**IFB No: SL- P116/UVA/WS/2020/05**

1. வளர்ச்சிபெறும் பிராந்தியங்களில் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் நிறுவனத்திடமிருந்து (JICA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது வளர்ச்சிபெறும் பிராந்தியங்களில் கிராமிய உட்கட்டமைப்பு செயற்றிட்ட ஆகுசெலவிற்காக கடனொன்றைப் பெற்றுள்ளது. இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கந்தகெட்டிய பிரதேச சபையிலுள்ள பதுளு ஓயாவிற்குக் குறுக்காக மஹகெலே பாலத்தை நிர்மாணித்தல், கந்தகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தெடில்ல கிராம சேவையாளர் பிரிவில் தெடில்ல மற்றும் மங்கட அணைக்கட்டின் பிரதான கால்வாய் மற்றும் உப கால்வாய்களை மேம்படுத்துதல், சொரணாதொட்ட பிரதேச செயலாளர் பிரிவின் போலியத்த கிராம சேவகர் பிரிவிலுள்ள கந்தபொட்டவெல கால்வாய் மற்றும் மீகஹகிவுல பிரதேச செயலாளர் பிரிவின் களுகஹகந்துர கிராம சேவையாளர் பிரிவில் வெந்தன்கேவெல கால்வாய் மற்றும் உப கால்வாய் என்பவற்றை மேம்படுத்துதல் மற்றும் வெலிகேமுல்ல உப திட்டத்திற்கான நீர் வழங்கல் திட்டத்தை நிர்மாணித்தல் போன்ற பணி ஒப்பந்தத்தின் கீழான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. விலைமனுக்கோரலானது ஜப்பானின் ODA கடன்களின் கீழான பெறுகைக்கான ஏற்புடையதான வழிகாட்டிகளுக்கமைவாக நடைமுறை மூலம் நடாத்தப்படுவதுடன் கடன் உடன்படிக்கையில் வரையறுக்கப்பட்டவாறு தகுதியுள்ள வளநாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் இதில் பங்குபெற்றலாம்.
3. பின்வரும் ஒப்பந்தங்களுக்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஊவா மாகாணத்தின் சார்பில் மாகாண பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

   i. **பொதி இலக்கம்: SL -P116/UP2/RR/2021/20**

   செயற்றிட்ட அமுலாக்கத்தின் 2ஆம் படிநிலையின் ஒரு பகுதியாக ஊவா மாகாணத்திலுள்ள பதுளை மாவட்டத்தின் கந்தகெட்டிய பிரதேச சபையிலுள்ள பதுளுஓயாவிற்கு குறுக்காக மஹகெலே பாலத்தை நிர்மாணித்தல் ஒப்பந்த இலக்கம்: SL -P116/UVA/RR/2021/20 இந்த வேலைகளில் Abutment of Wing wall, இறங்குதுறையின் நிர்மாணம், சிறப்புக் கட்டமைப்பின் நிர்மாணம் மற்றும் அணுகுமுறைகளின் நிர்மாணம் என்பன அடங்குகின்றன.

   ii. **பொதி இலக்கம்: SL- P116/UP2/AW/2020/05**

   கந்தகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் தடில்ல கிராம சேவகர் பிரிவிலுள்ள தடில்ல, புல்லே எல, சொரணாதொட்ட பிரதேச செயலாளர் பிரிவின் போலியத்த கிராம சேவகர் பிரிவிலுள்ள போலியத்த, மீகஹகிவுல பிரதேச செயலாளர் பிரிவின் கலுகஹகந்துர கிராம சேவையாளர் பிரிவிலுள்ள கலுகஹகந்துர கிராமங்களின் நீர்ப்பாசன மேம்படுத்தல் முறைமைகளை நிர்மாணித்தல் மற்றும் நிறைவு செய்தல்.

   iii. **பொதி இலக்கம்: SL- P116/UVA/WS/2020/05**

   குடா ஓயவிலுள்ள உள்ளீப்புக் கட்டமைப்பின் நிர்மாணம் உட்பட வெலிகேமுல்ல உப திட்ட நீர் வழங்கல் முறைமைகளை நிர்மாணித்தல் மற்றும் நிறைவு செய்தல், Roughing வடிகட்டி, பெரோ சீமெந்து தரைக் கீழ் நீர்த்தேக்கம், வசதிகள் கட்டிடம், சகல துணைப்பாகங்கள் சகிதமான குளோரினேஷன் பொதி, மூல நீர் பிரதானத்திற்கு uPVC வழங்குதல் மற்றும் பதித்தல் மற்றுமு் uPVC விநியோகக் குழாய் வலையமைப்பு, வால்வுகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல், மதகு கடவைகள், கிடைமட்ட துளையிடலைப் பயன்படுத்தி வீதிக் கடவைகள் மற்றும் வீடுகளுக்கான இணைப்பை வழங்குதல்.

**ஒப்பந்தத்தை வழங்குவதற்காக, விலைமனு ஆவணங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சில தகுதித்தன்மை தகவுத்திறன்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.**

| தொடர் இல. | பொதி இல. | மீளளிக்கப் படாத வைப்புத் தொகை | விலை மனுப் பிணை | CIDA பதிவு | நிதியிடல் நிலவரம் | நிதியிடல் வளங்கள் | நிர்மாண அனுபவம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | SL -P116/ UP2 / RR/2021/20 | 20,000.00 இ.ரூபா | 1.7 மில்லியன் இல. ரூபா விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 147 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும் | பாலங்கள் நிர்மாணத்தில் ஆகக் குறைந்தது C4 அல்லது அதற்கு மேற்பட்ட தரப் பதிவு நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ் | கடந்த 3 வருடங்களில் வருடாந்த சராசரி நிர்மாண நிதிப்புரள்வு ஆகக் குறைந்தது 140 மில். இ. ரூபா | திரவச் சொத்துக்கள் அல்லது கடன் வசதியின் தொகை ஆகக் குறைந்தது 40 மில். இ. ரூபா | கடந்த 7 வருடங்களில் திருப்திகரமாக (ஒவ்வொன்றும் ஆகக் குறைந்தது 50 மில். இ. ரூபா பெறுமதியான) பூர்த்தி செய்யப்பட்ட இதற்கு நிகரான ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தம் |
| 02 | SL- P116/ UP2/ AW/2020/05 | 18,000.00 இ.ரூபா | 1.50 மில்லியன் இல. ரூபா விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 147 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும் | 1. நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு கால்வாய் நிர்மாணத்தில் ஆகக் குறைந்தது C4 தரம்<br>2. இலங்கையில் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழின் பிரதி<br>3. PCA 3 படிவம் | கடந்த 3 வருடங்களில் வருடாந்த சராசரி நிர்மாண நிதிப்புரள்வு ஆகக் குறைந்தது 118 மில். இ. ரூபா | திரவச் சொத்துக்கள் அல்லது கடன் வசதியின் தொகை ஆகக் குறைந்தது 31 மில். இ. ரூபா | கடந்த 7 வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட 47 மில். இ. ரூபாவிற்குக் குறையாத இதற்கு நிகரான ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தம் |
